# தமிழ்

## இகரம்

### முதல் பருவம்





தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

# தமிழ்

## இகரம்

## முதல் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு** - 2025

**விலை: ரூ.** 160.00

## பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

## நூல் அச்சாக்கம்

கற்க கசடற

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in


| ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும்<br>(18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்) |
|---|
| குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?<br>அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098<br>உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்<br>CHILD LINE 1098 NIGHT & DAY |
| மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?<br>தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?<br>அழையுங்கள் 14417<br>உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்<br>14417 கல்வித் தகவல் மையம் |

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

-'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.

# தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும் பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன்வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | **தமிழ்த்தாத்தா உ.வே.சா.**<br>பாடி மகிழ்வோம்: மனதில் உறுதி வேண்டும்<br>தெரிந்துகொள்வோம்: இடைச்சொற்கள் | கேட்டல் கருத்தறிதல்: தமிழில் முதல் நூல்<br>செந்தமிழ்ச்செல்வம்: வெற்றிவேற்கை | 1 |
| 2 | **ஷேக்ஸ்பியர்**<br>பாடி மகிழ்வோம்: தமிழுக்கும் அமுதென்று பேர்<br>தெரிந்துகொள்வோம்: மரபுத்தொடர்கள் | கேட்டல் கருத்தறிதல்: அலெக்ஸாண்டரின் அறிவுக்கூர்மை<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 11 |
| 3 | **தமிழர் வீரம்**<br>பாடி மகிழ்வோம்: கடல்<br>தெரிந்துகொள்வோம்: திணை | கேட்டல் கருத்தறிதல்: மரபு விளையாட்டு – கபடி<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 20 |
| 4 | **கடற்பயணம்**<br>பாடி மகிழ்வோம்: கடற்கரை<br>தெரிந்துகொள்வோம்: இணைமொழிகள் | கேட்டல் கருத்தறிதல்: நெல்சன் மண்டேலா<br>செந்தமிழ்ச்செல்வம்: புதிய ஆத்திசூடி | 30 |
| 5 | **தமிழர் ஆடை, அணிகலன்**<br>பாடி மகிழ்வோம்: தொழிலைக் கற்போம்<br>தெரிந்துகொள்வோம்: பால் | கேட்டல் கருத்தறிதல்: தாக்கா மஸ்லின் துணிவகை<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 39 |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 6 | **ஹெலன் கெல்லர்** | | 50 |
| | பாடி மகிழ்வோம்: பெண்கல்வி | கேட்டல் கருத்தறிதல்: உலக மாற்றுத்திறனாளிகள் நாள் | |
| | தெரிந்துகொள்வோம்: ண, ந, ன ஒலிவேறுபாடு | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| 7 | **வனவிலங்குப் பாதுகாப்பு** | | 59 |
| | பாடி மகிழ்வோம்: பாட்டுப் பாடுவேன் | கேட்டல் கருத்தறிதல்: யானை | |
| | தெரிந்துகொள்வோம்: ஒருமை, பன்மை | செந்தமிழ்ச்செல்வம்: கொன்றைவேந்தன் | |
| 8 | **திருக்குற்றாலக் குறவஞ்சி** | | 72 |
| | பாடி மகிழ்வோம்: பூத்ததே | கேட்டல் கருத்தறிதல்: குற்றால அருவி | |
| | தெரிந்துகொள்வோம்: எண்ணுப்பெயர்கள் | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | | 83 |
| 9 | **கல்வியே அழியாச் செல்வம்** | | 89 |
| | பாடி மகிழ்வோம்: கல்வி | கேட்டல் கருத்தறிதல்: கூகுள் தலைமைச் செயல் அலுவலர் - சுந்தர்பிச்சை | |
| | தெரிந்துகொள்வோம்: பெயரெச்சம், வினையெச்சம் | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| 10 | **மதிநுட்பம்** | | 99 |
| | பாடி மகிழ்வோம்: ஓடி வா! | கேட்டல் கருத்தறிதல்: இளம் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா | |
| | தெரிந்துகொள்வோம்: ர, ற ஒலிவேறுபாடு | செந்தமிழ்ச்செல்வம்: மூதுரை | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|


| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 11 | **தொழில்கள்** | | 111 |
| | பாடி மகிழ்வோம்: கைத்தொழில் | கேட்டல் கருத்தறிதல்: பருத்திப் பெண்டிர் | |
| | தெரிந்துகொள்வோம்: பெயரடை, வினையடை | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| 12 | **வேளாண்மை** | | 123 |
| | பாடி மகிழ்வோம்: மின்னி மின்னி வானத்தில்... | கேட்டல் கருத்தறிதல்: பாரி வள்ளல் | |
| | தெரிந்துகொள்வோம்: ல, ழ, ள ஒலிவேறுபாடு | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| 13 | **சித்தன்னவாசல்** | | 133 |
| | பாடி மகிழ்வோம்: மிக அழகு | கேட்டல் கருத்தறிதல்: நட்பின் சிறப்பு | |
| | தெரிந்துகொள்வோம்: வினாச்சொற்கள் | செந்தமிழ்ச்செல்வம்: இனியவை நாற்பது | |
| 14 | **பறையிசைக் கருவி** | | 144 |
| | பாடி மகிழ்வோம்: அழகிய தமிழில் எழுதுங்கள் | கேட்டல் கருத்தறிதல்: வள்ளைப் பாட்டு | |
| | தெரிந்துகொள்வோம்: இரு சொல், மூன்று சொல் தொடர்கள் | செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | | 154 |

1.1 பேசுவோம்

பாடம்
1



## கலந்துரையாடுவோம்

ஓலைச்சுவடிகள் குறித்து நீங்கள் அறிந்தனவற்றைப் பற்றி உங்கள் வகுப்பில் கலந்துரையாடுக.

## 1.2 படிப்போம்



### தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதர்

ஆடி மாதம், விடியும் பொழுதில் முதியவர் ஒருவர் ஆற்றங்கரைக்குச் சென்றார். அங்கு, ஓர் ஓரமாக மறைந்து நின்றார். அந்த நேரத்தில் சிலர் அங்கு வந்தனர். அவர்கள் தம் கையிலிருந்த பனை ஓலையால் செய்யப்பட்ட ஏடுகளை வீசிவிட்டுச் சென்றனர். முதியவர், அவர்கள் அறியாதவாறு, ஆற்றுக்குள் இறங்கினார். மிதந்து வந்த அந்த ஏடுகளை மெதுவாக எடுத்தார். அவர் மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது. அவற்றில் தமிழ்ப் பாடல்களும் உரைகளும் இருந்தன. இவ்வாறாகப் பல இடங்களிலும் அலைந்து திரிந்து ஓலைச்சுவடிகளைத் தேடியெடுத்தார். அவற்றிலுள்ள பாடல்களையும் உரைகளையும் நூல்களாக அச்சிட்டார். தமிழுக்குப் பெருமை சேர்த்தார். அவர்தாம் 'தமிழ்த்தாத்தா' உ. வே. சாமிநாதர் ஆவார்.

## பொருள் அறிவோம்

| | | |
|---|---|---|
| ஓலைச்சுவடிகள் | - | பனை ஓலை ஏடுகள் |
| முதியவர் | - | வயதானவர் |

## விடை காண்போம்

1. ஆற்றுக்குள் இறங்கியவர் யார்?
2. ஏடுகள் எவற்றால் செய்யப்பட்டிருந்தன?
3. ஓலைச்சுவடிகளில் எவையெல்லாம் இருந்தன?
4. உ.வே.சாமிநாதர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

## 1.3 பாடிமகிழ்வோம்

### மனதில் உறுதி வேண்டும்

மனதில் உறுதி வேண்டும்,
    வாக்கினிலே இனிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
    நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;

கனவு மெய்ப்பட வேண்டும்,
    கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்,
    தரணியிலே பெருமை வேண்டும்.

- பாரதியார்



## 1.4 தெரிந்துகொள்வோம்

### இடைச்சொற்கள்

உம்



பெட்டியில் ஆரஞ்சும் கொய்யாவும் திராட்சையும் ஆப்பிளும் அன்னாசியும் இருந்தன.

அது



மரத்தினது இலைகள் வீட்டின்மேல் படர்ந்திருந்தன.

முன்



மாறனுக்கு முன்னால் நாய் ஓடியது.

பின்



கதவிற்குப் பின்னால் பூனை இருந்தது.

கண்



குரங்கு மரத்தின்கண் தாவியது.

ஆல்



மரத்தினால் செய்யப்பட்ட மேசையின் கீழே பொம்மை இருந்தது.

என



சாரதா கலகலவெனச் சிரித்தாள்.

போல்



முகிலனைப் போல் கவின் இருந்தான்.

இருந்து



அப்பா வீட்டிலிருந்து சென்றார்.

ஆறு



ஆசிரியர் நன்கு புரியுமாறு பாடத்தை விளக்கிக் கூறினார்.

என்று



அண்ணனுடன் நான் விறுவிறுவென்று நடந்தேன்.

கு



உழவர் வயலுக்கு நீர் பாய்ச்சினார்.

தனித்து நிற்காது பெயரையோ வினையையோ சார்ந்து வரும் சொல் இடைச்சொல்

## பயிற்சிகள்

### (அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வைரம் ________________ மின்னியது.
2. திங்கட்கிழமைக்கு ________________ ஞாயிறு வரும்.
3. கவியரசன் தன் ________________ எழுதுகோல் தந்தான்.
4. வீரன் ________________ பாய்ந்தான்.
5. பாம்பு ________________ ஊர்ந்து சென்றது.
6. ஆனி மாதத்திற்குப் ________________ ஆவணி வரும்.

நண்பனுக்கு | முன்னால் | புலிபோலப் | பளபளவென | பின்னால் | சரசரவென

### (ஆ) கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான இடைச்சொற்களைக் கொண்டு நிரப்புக.

| | | |
|---|---|---|
| 1. |  | மரத்தின் கீழே ____________ மரத்தின் மேலே ____________ இருந்தன. (அணிலும்/மயிலும்) |
| 2. |  | வீட்டினுள் ____________ கண்ட நாய், மகிழ்ச்சியுடன் தன் ____________ ஆட்டியது. (சிறுமியைக்/வாலை) |
| 3. |  | அப்பா ____________ நடப்பதைப் பார்த்துக் குழந்தையும் ____________ நடந்தது. (பின்னால்/முன்னால்) |
| 4. |  | மேசையின் மேலிருந்த ____________ நிறமும் மேசையின் கீழிருந்த ____________ நிறமும் ஒன்றாக இருந்தன. (பூனையின்/பந்தின்) |

## 1.5 மொழியோடு விளையாடுவோம்




1. கடை    2. ________    3. ________    4. ________

5. ________    6. ________    7. ________    8. ________

### தகவல் துளி

ஃப்ரான்சிஸ் வைட் எல்லீஸ் இங்கிலாந்தைச் சார்ந்தவர். இவர், சென்னை மாகாண ஆளுநராகப் பணியாற்றியபோது, திருக்குறளைப் படித்தார். இதிலுள்ள அரிய செய்திகளை உலகெங்கும் கொண்டு செல்ல நினைத்தார். எனவே, திருக்குறளின் அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதுவே திருக்குறளின் முதல் ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகும்.



ஃப்ரான்சிஸ் வைட் எல்லீஸ்

## கருத்து விளக்கப்படம்

அறிவிப்பைப் படித்து வினாக்களுக்கு விடை கூறுக.




### வினாக்கள்

1. ஓவியப் போட்டியின் தலைப்பு என்ன?
2. ஓவியப் போட்டியில் இரண்டாம் பரிசுக்கான தொகை எவ்வளவு?
3. தமிழ் இணையக் கல்விக்கழகத்தோடு இணைந்து ஓவியப்போட்டியை நடத்தும் துறை எது?
4. ஓவியப் போட்டி எதை மையமாக வைத்து நடத்தப்படுகிறது?
5. ஓவியப் போட்டி யாருக்கு நடத்தப்படுகிறது?

## 1.6 கேட்டல் கருத்தறிதல்




### தமிழில் முதல் நூல்

இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல்நூலாகக் கருதப்படுவது 'தம்பிரான் வணக்கம்'. இந்நூலை எழுதியவர் ஹென்றிக் ஹென்றிக்சு. கேரளா மாநிலத்திலுள்ள கொல்லம் என்னும் இடத்தில் இந்நூல் 20.10.1578இல் அச்சேறியது. இது தமிழ்மொழியில் அச்சிடப்பட்டது. இதனால் இந்திய மொழிகளுள் முதலில் அச்சில் ஏறிய மொழி என்ற பெருமை தமிழுக்குக் கிடைத்தது.

### வினாக்கள்

1. தமிழில் அச்சிடப்பட்ட முதல் நூல் எது?
2. இந்திய மொழிகளுள் முதலில் அச்சில் ஏறிய மொழி எது?
3. 'தம்பிரான் வணக்கம்' என்னும் நூலை எழுதியவர் யார்?
4. 'தம்பிரான் வணக்கம்' என்ற நூல் அச்சேறிய இடம் எது?

## 1.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 1.8 செந்தமிழ்ச்செல்வம்

### வெற்றிவேற்கை

கல்விக்கு அழகு கசடற மொழிதல்

(பாடல்-2)

- அதிவீரராம பாண்டியன்

(மொழிதல் = பேசுதல், எடுத்துக் கூறுதல்)

**பொருள்:**

ஒருவன் கற்ற கல்விக்கு அழகாவது, தான் கற்றவற்றைக் குற்றமறப் பேசுதல்/எடுத்துக் கூறுதல் ஆகும்.

## 1.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆற்றங்கரை | - | River bank |
| 2. | விடியற்காலை | - | Early morning |
| 3. | முதியவர் | - | Old man |
| 4. | மகிழ்ச்சி | - | Happiness |
| 5. | ஓலைச்சுவடி | - | Palmleaf Manuscript |
| 6. | அச்சிடுதல் | - | Printing |

## 1.10 செயல்திட்டம்

ஓலைச்சுவடியின் மாதிரி ஒன்றைச் செய்து வருக.

2.1 பேசுவோம்

பாடம் 2



## கலந்துரையாடுவோம்

நீங்கள் பார்த்த நாடகங்கள் குறித்து உங்கள் வகுப்பில் கலந்துரையாடுக.

## 2.2 படிப்போம்

### ஷேக்ஸ்பியர்



இலண்டன் மாநகரில் நாடகங்கள் புகழ்பெற்றிருந்த காலம் அது. குதிரை வண்டிகளில் சென்று நாடகங்கள் பார்ப்பதை மக்கள் பொழுதுபோக்காகக் கருதினர்.



நாடக அரங்கத்திற்கு வெளியே குதிரை வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றை ஒருவர் காவல் காத்தார்.



நாடகக் காட்சியின் வசனங்களைக் கேட்டு, மனப்பாடம் செய்வது அந்தக் குதிரைக் காப்பாளரின் வழக்கம். அவருக்கு நினைவாற்றல் மிகுதி. தாம் கேட்ட வசனங்களைப் பிழையின்றி, ஏற்ற இறக்கங்களுடன் மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்ப்பார்.



வழக்கம்போல் அன்றும் நாடகம் தொடங்கியது. ஆனால், அந்நாடகத்தில் முதன்மையாக நடிக்க வேண்டிய நடிகர் வரவில்லை. அவருக்குப் பதிலாக, அந்தக் குதிரைக் காப்பாளர் நடித்தார். அனைவரும் அவரது நடிப்பைப் பாராட்டினர். அதன்பின், தொடர்ந்து பல நாடகங்களில் நடித்தார்.



பின்னாளில் அவர் நிறைய நாடகங்களை எழுதினார். அவர் எழுதிய நாடகங்களில், கதைமாந்தர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அவரது நாடக வசனங்கள் உயிரோட்டத்துடன் இருந்தன.



அவர், தாம் எழுதிய நாடகங்கள் வாயிலாக அனைவராலும் அறியப்பட்டார். அவருடைய நாடக உரையாடல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் ஆங்கில அகராதியில் இடம்பெற்றுள்ளன. அவர்தான், நவீன ஆங்கில இலக்கியத்தின் தந்தையாகக் கருதப்படும் உலகப்புகழ் பெற்ற ஷேக்ஸ்பியர் ஆவார்.

(ஷேக்ஸ்பியர் பற்றி நிலவும் கற்பனைக் கதைகளுள் இதுவும் ஒன்று)

## பொருள் அறிவோம்

1. நாடக அரங்கு – நாடகம் நடக்கும் இடம்
2. வசனங்கள் – நாடக உரையாடல்கள்

## விடை காண்போம்

1. மக்கள் எதனைப் பொழுதுபோக்காகக் கருதினர்?
2. நாடகத்தில் நடிக்க, குதிரைக் காப்பாளருக்கு எப்படி வாய்ப்பு கிடைத்தது?
3. குதிரைக் காப்பாளர் எவ்வாறு நாடக ஆசிரியரானார்?
4. ஷேக்ஸ்பியர் அனைவராலும் எவ்வாறு அறியப்படுகிறார்?
5. ஷேக்ஸ்பியர், தம் நாடகங்களில் யாருக்கு முக்கியத்துவம் அளித்தார்?

## 2.3 பாடிமகிழ்வோம்

### தமிழுக்கும் அமுதென்று பேர்

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

- பாரதிதாசன்



## 2.4 தெரிந்துகொள்வோம்




ஒரு சொற்றொடர், அதற்குரிய பொருளைக் குறிக்காமல், வேறொரு பொருளைக் குறிப்பது மரபுத்தொடர் எனப்படும்.

## பயிற்சிகள்

### (அ) பொருத்துக

1. கொடிகட்டிப் பறத்தல் - திணறுதல்
2. திக்குமுக்காடுதல் - செயலில் உறுதி
3. விடாப்பிடி - புகழோடு விளங்குதல்

### (ஆ) கீழ்க்காணும் உரைப்பகுதியிலுள்ள மரபுத்தொடர்களைக் கோடிட்டுக் காட்டுக.

பூங்குழலி தன் அம்மாவிடம் பூங்காவிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று விடாப்பிடியாய் கேட்டாள். அம்மாவும் பூங்குழலியை அழைத்துக்கொண்டு பூங்காவிற்குச் சென்றாள். அங்கு, கொடிகட்டிப் பறக்கும் பாடகியைப் பார்த்ததும் பூங்குழலி மகிழ்ச்சியில் திக்குமுக்காடினாள்.

## 2.5 மொழியோடு விளையாடுவோம்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ற் | கு | வி | ய | ல் |

1. கயல்
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________

## சுவைச்செய்தி

தமிழ்நாட்டில், பெண்களை மட்டுமே கொண்டு முதன்முதலில் நாடகக்குழுவை நடத்தியவர், பாலாமணி அம்மாள். இவரது குழுவில் எழுபது பெண்கள் இருந்தனர். நான்கு குதிரை பூட்டப்பட்ட சாரட் வண்டியில்தான் பாலாமணி அம்மாள் நாடகங்களுக்குச் செல்வார். இவரது நாடகங்களைப் பார்க்க வருபவர்களுக்காகத் தனியாக இரயில் வண்டிகள் இயக்கப்பட்டன. அந்த இரயில் வண்டிகளுக்கு, 'பாலாமணி ஸ்பெஷல்' எனப் பெயரிட்டிருந்தனர்.



நாடக அரசி
பாலாமணி அம்மாள்

## 2.6 கேட்டல் கருத்தறிதல்

### அலெக்ஸாண்டரின் அறிவுக்கூர்மை

பேரரசர் ஃபிலிப், புதிதாக வாங்கப்பட்ட குதிரைகளைப் பார்வையிட்டார். அவற்றுள் ஒரு குதிரை மட்டும் முரட்டுத்தனமாக நடந்துகொண்டது. அக்குதிரை யாரையும் அருகில் நெருங்கவிடவில்லை. அதனை அடக்கமுடியாமல் அனைவரும் திணறினர். அப்போது, இதனைப் பார்த்துக்கொண்டிருந்த இளவரசர் அலெக்ஸாண்டர், தாம் குதிரையை அடக்குவதாகத் தெரிவித்தார். பேரரசரும் ஏற்றுக்கொண்டார். அலெக்ஸாண்டர், அக்குதிரையை வேறு இடத்திற்குக் கொண்டு சென்றார். இப்போது, அதன்மீது அவர் ஏறி அமர்ந்தபோதும் குதிரை ஒன்றும் செய்யவில்லை. பார்த்துக் கொண்டிருந்த எல்லாரும் கைகளைத் தட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். குதிரை எப்படி இவ்வளவு அமைதியாக நடந்துகொண்டது எனப் பேரரசருக்கும் வியப்பு ஏற்பட்டது. அதுபற்றி அலெக்ஸாண்டரிடம் கேட்டார். குதிரை தன் நிழலைப் பார்த்துத் தானே மிரண்டது. அதனை வேறு இடத்தில் நிற்க வைத்ததும் அதன் முரட்டுத்தனம் அகன்றது என அலெக்ஸாண்டர் கூறினார். பேரரசர் ஃபிலிப், அலெக்ஸாண்டரின் அறிவுக்கூர்மையைக் கண்டு வியந்தார். அவருக்குக் குதிரையைப் பரிசாக அளித்து மகிழ்ந்தார்.

### வினாக்கள்

1. குதிரைகளைப் பார்வையிட்ட பேரரசர் யார்?
2. குதிரை ஏன் முரட்டுத்தனமாக நடந்துகொண்டது?
3. முரட்டுத்தனமாக நடந்துகொண்ட குதிரையை அடக்கியவர் யார்?
4. முரட்டுத்தனமாக நடந்துகொண்ட குதிரையை இளவரசர் எவ்வாறு அடக்கினார்?
5. குதிரையைப் புரிந்துகொண்டதற்காக இளவரசர் பெற்ற பரிசு யாது?

## 2.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 2.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

(குறள் 391)

-திருவள்ளுவர்

(கசடற = குற்றம் இல்லாமல்)

**பொருள்:**

கற்க வேண்டியவற்றைப் பிழையின்றிக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு, அதன்படி வாழவேண்டும்.

## 2.9 அறிந்துகொள்வோம்

1. நாடகம் - Drama
2. நாடக அரங்கு - Theatre
3. வசனம் - Dialogue
4. கதைமாந்தர்கள் - Characters
5. குதிரைவண்டி - Chariot
6. உயிரோட்டம் - Liveliness
7. இலக்கியம் - Literature
8. சொற்றொடர் - Phrase
9. அகராதி - Dictionary
10. புகழ் - Fame

## 2.10 செயல்திட்டம்

உங்களுக்குக் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு நாடக அரங்கின் மாதிரி ஒன்றைச் செய்து வருக.

3.1 பேசுவோம்

பாடம்
3



## கலந்துரையாடுவோம்

போர்க்களச் சூழலை விவரிக்கும் இப்படம் குறித்து, உங்கள் கருத்துகளை வெளிப்படுத்துக.

## 3.2 படிப்போம்

### தமிழர் வீரம்



தமிழர்களின் பண்பாட்டுப் பெட்டகமாய் விளங்குவது புறநானூறு என்னும் நூல். இந்நூலில் மக்களின் வாழ்க்கைமுறை, அரசர்களின் ஆட்சிமுறை, போர் பற்றிய செய்திகள் உள்ளன. போர் நடைபெறும்போது ஆண்களும் பெண்களும் வீரத்துடன் பகைவர்களை எதிர்த்து நின்றனர். ஒரு பெண், முதல் நாள் போரில் தன் தந்தையை இழந்தாள். மறுநாள் போரில் தன் கணவனையும் இழந்தாள். ஆனாலும் நாட்டைக் காக்கத் துடித்தாள். தன் இளவயது மகனிடம் வாள் கொடுத்துப் போரிடச் சொன்னாள் என ஒரு பாடல் விளக்குகிறது.

## பொருள் அறிவோம்

1. பெட்டகம் – அரிய செய்திகளைக் கொண்ட தொகுப்பு
2. புறநானூறு – எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

## விடை காண்போம்

1. தமிழர்களின் பண்பாட்டுப் பெட்டகம் எது?
2. புறநானூறு என்னும் நூலில் எத்தகைய செய்திகள் இடம்பெற்றுள்ளன?
3. போரில் வீரத்துடன் எதிர்த்து நின்றவர்கள் யார்?
4. ஒரு பெண்ணின் வீரத்தைப் புறநானூறு எவ்வாறு குறிப்பிட்டுள்ளது?

## 3.3 பாடிமகிழ்வோம்

### கடல்



நீல வண்ணக் கடலிலே
    நீந்திச் செல்லும் கப்பலாம்!
வாலைத் தூக்கி அடித்துமே
    வாளை மீன்கள் நீந்துமாம்!
சிறந்த நல்ல பவழங்கள்
    செறிந்து கிடக்கும் கடலிலே!
உவந்து மாதர் அணிந்திடும்
    உயர்ந்த முத்தும் கடலிலே!
வெற்றி கொண்டு ஊதவே
    வெள்ளைச் சங்கும் கடலிலே!
உற்ற நண்பன் போலவே
    உதவும் உப்பும் கடலிலே!

– பி.வி. கிரி



## 3.4 தெரிந்துகொள்வோம்

### திணை

உலகிலுள்ள அனைத்துப் பொருள்களையும் உயர்திணை, அஃறிணை எனப் பகுக்க முடியும்.

### உயர்திணை

எ.கா: அம்மா, வளவன், மகிழினி.



### அஃறிணை

எ.கா: வீடு, மரம், ஆடு



மக்களைக் குறிப்பது உயர்திணை.

மக்கள் அல்லாத உயிருள்ள பொருள்கள், உயிரற்ற பொருள்கள் அனைத்தையும் குறிப்பது அஃறிணை.

## பயிற்சிகள்

(அ) படத்திலிருந்து உயர்திணைப் பொருள்களை வட்டமிடுக.




(ஆ) அஃறிணைப் பொருள்களின் பெயர்களைக் கூறுக.



## (இ) பின்வரும் உரைப்பகுதியில் வண்ணமிட்ட சொற்களை உயர்திணை, அஃறிணை என அட்டவணைப்படுத்துக.

மாணவர்கள் வண்டலூர் உயிரியல் பூங்காவிற்குச் சென்றனர். அங்கு, சாலையின் இருபுறமும் பசுமையான மரம், செடி, கொடி அனைத்தையும் கண்டு மகிழ்ந்தனர். இனியா, சிபி, தமிழ்ச்செல்வன், பாரி ஆகியோர் குழுத் தலைவர்களாகச் செயல்பட்டனர். கவிதாவும் கவினும் பூங்காவினுள் நுழைந்தவுடன் மயில் ஆடுவதைப் பார்த்து மகிழ்ந்தனர். குரங்கு, மான், ஒட்டகச்சிவிங்கி முதலானவற்றைப் பார்த்து ஆசிரியர்களும் மாணவர்களும் மகிழ்ந்தனர். நிறைவாக, தொலைவில் நடந்துசெல்லும் யானைக் கூட்டங்களைப் பார்த்து அனைவரும் வியந்தனர்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

## (ஈ) அன்றாட வாழ்க்கையில் நீங்கள் காண்பனவற்றை உயர்திணை, அஃறிணை எனப் பிரித்து எழுதுக.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| 1. அம்மா | 1. புத்தகம் |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |
| 6. | 6. |
| 7. | 7. |

## 3.5 மொழியோடு விளையாடுவோம்

முதல் படத்தின் பெயரிலுள்ள முதல் எழுத்தையும் இரண்டாம் படத்தின் பெயரிலுள்ள இரண்டாம் எழுத்தையும் சேர்த்து, புதிய சொல் உருவாக்குக.



மரம்



அணில்

மணி



பூமாலை



யானை

____________



வாத்து



கிளி

____________



வயல்



இலை

____________



ஆப்பிள்



எறும்பு

____________

## 3.6 கேட்டல் கருத்தறிதல்

### மரபு விளையாட்டு – கபடி



தமிழர்களின் மரபு விளையாட்டுகளுள் ஒன்று கபடி. இதனைச் சடுகுடு என்றும் அழைப்பர். இவ்விளையாட்டை இளைஞர்களும் பெண்களும் சிறுவர்களும் விரும்பி ஆடுவர். கிராமத்துப் பொது இடங்களிலும் ஆற்று மணலிலும் இவ்விளையாட்டினை ஆடுவர். ஆடுவோரை இரு அணியினராகப் பிரிப்பர். அணிக்கு ஏழு பேர் வீதம் சேர்ந்து ஆடுவர். பாடிச் செல்வது கபடி விளையாட்டின் அடிப்படையாகும். முதல் அணியைச் சேர்ந்தவர் பாடிக் கொண்டே இரண்டாம் அணியினர் இருக்கும் பகுதிக்குச் சென்று, ஒருவரையோ, ஒன்றுக்கு மேற்பட்டவர்களையோ தொட்டு வரவேண்டும். தொடுவதற்கு வாய்ப்பில்லை என்றால் தொடாமலும் வரலாம். பாடிச் செல்வோர் அடுத்த அணியினரால் பிடிக்கவும் படலாம். அதேபோல் இரண்டாம் அணியினரும் செய்ய வேண்டும். அதிக புள்ளிகள் எடுத்த அணி, வெற்றி பெற்றதாகக் கருதப்படும். கபடி விளையாட்டு இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளது. ஒலிம்பிக்கில் இடம்பெறும் அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் மாநில விளையாட்டு கபடி ஆகும்.

### வினாக்கள்

1. தமிழர்களின் மரபு விளையாட்டுகளுள் ஒன்றாகக் கூறப்படுவது எது?
2. கபடி விளையாட்டை எந்தெந்த இடங்களில் விளையாடுவர்?
3. கபடி விளையாட்டில் ஓர் அணியில் எத்தனை பேர் இடம்பெறுவர்?
4. கபடி விளையாட்டின் அடிப்படை என்ன?
5. அதிக புள்ளிகள் எடுத்த அணி தோல்வி அடைந்ததாகக் கருதப்படும். சரியா? தவறா?

## தகவல் துளி



பண்டைய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் முரசம் பயன்பாட்டில் இருந்தது. இதனை முரசு எனவும் கூறுவர். ஒரு செய்தியை அறிவிக்க இதனைப் பயன்படுத்தினர். முரசுகள் மூவகையாக இருந்தன. ஒன்று நீதிமுரசு. இது, சிறப்பான ஆட்சியின் சின்னமாக இருந்தது. இரண்டாவது, கொடை முரசு. இது, வள்ளல் தன்மைக்குச் சின்னமாகும். மூன்றாவது, படை முரசு. இது, வீரத்தின் சின்னமாகும்.

## 3.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 3.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

(குறள்: 731)

-திருவள்ளுவர்

(தள்ளா = குறையா: தக்கார் = தகுதியுடையவர்)

**பொருள்:**

குறையாத விளைபொருளும் தகுதியுடைய அறிஞரும் கேடு இல்லாத செல்வத்தை உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நல்ல நாடாகும்.

## 3.9 அறிந்துகொள்வோம்

1. கணவன் - Husband
2. ஆட்சிமுறை - Governance
3. மகன் - Son
4. வாள் - Sword
5. அரசன் - King
6. போர் - War
7. வாழ்க்கைமுறை - Lifestyle
8. வீரம் - Valour

## 3.10 செயல்திட்டம்

நாட்டுக்கு உழைத்த நல்லோர் ஒருவரின் செயல்களை வரைகதையாக (Cartoon) உருவாக்கி வருக.

4.1 பேசுவோம்

# பாடம் 4



பார்த்தலோமியோ டயஸ்
(Bartolomeu Dias)



வாஸ்கோடகாமா
(Vasco da Gama )

## கலந்துரையாடுவோம்

படத்திலுள்ள கடற்பயணிகள் பற்றி வகுப்பில் ஆசிரியரோடு கலந்துரையாடுக.

## 4.2 படிப்போம்

### கடற்பயணம்



**கிறிஸ்டோபர் கொலம்பஸ்**

என் பெயர் கொலம்பஸ். எனக்குக் கடற்பயணம் செய்வதென்றால் மிகவும் பிடிக்கும். நான் கப்பலில் அடிக்கடி பயணம் மேற்கொண்டு புதிய இடங்களுக்குச் செல்ல விரும்புவேன். ஒருமுறை மேற்குத்திசை நோக்கிச் சென்று, கிழக்குத் திசையை அடைய முயற்சி செய்தேன். அவ்வாறு நான் சென்றபோது. இடையில் ஒரு நிலப்பகுதியைக் கண்டேன். அந்த நிலப்பகுதிதான் 'அமெரிக்கா' என்று எனக்கு அப்போது தெரியாது. அப்பகுதி வளமிக்கதாகவும் செல்வங்கள் நிறைந்ததாகவும் இருந்தது. எனக்குப் பின்னால் கடற்பயணம் மேற்கொண்ட 'அமெரிக்கோ வெஸ்புகி' என்பவர்தாம் அந்நிலப்பகுதியைப் பற்றி உலகத்திற்குத் தெரியப்படுத்தினார். அவருடைய பெயராலேயே அப்பகுதி, 'அமெரிக்கா' என்று அழைக்கப்படுகிறது.

## பொருள் அறிவோம்

1. பயணம் – ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லுதல்
2. கடற்பயணம் – கப்பல் மூலம் கடலில் செல்லுதல்

## விடை காண்போம்

1. கொலம்பஸுக்கு மிகவும் பிடித்த செயல் எது?
2. கொலம்பஸ் எந்தத் திசை நோக்கிப் பயணம் மேற்கொண்டார்?
3. கொலம்பஸ் கண்ட நிலப்பகுதியின் பெயர் என்ன?
4. கொலம்பஸ் கண்ட நிலப்பகுதி எத்தன்மை உடையது?
5. 'அமெரிக்கா' என்னும் நிலப்பகுதி யாருடைய பெயரால் அழைக்கப்படுகிறது?

## 4.3 பாடிமகிழ்வோம்

### கடற்கரை

கடற் கரைக்குச் சென்றிடலாம்
வா தம்பி வா – அங்கே
காற்று வாங்கி வந்திடலாம்
வா தம்பி வா
உடல் வளர நல்லதடா
வா தம்பி வா – அந்த
உப்பங் காற்றின் சக்தியடா
வா தம்பி வா
வெள்ளை மணல் மீதிருப்போம்
வா தம்பி வா – சற்றே
விளை யாடித் திரும்பிடுவோம்
வா தம்பி வா
பிள்ளை களும் வந்திடுவார்
வா தம்பி வா – அங்கே
பெரிய வரும் கூடிடுவார்
வா தம்பி வா

அழ. வள்ளியப்பா



## 4.4 தெரிந்துகொள்வோம்

### இணைமொழி

மனித வாழ்வு **இன்பதுன்பம்** நிறைந்தது.

மாணவர்கள் **அல்லும் பகலும்** அயராது படிக்கவேண்டும்.

என் நண்பன் **அன்றும் இன்றும்** மாறா அன்போடு உள்ளான்.

ஒத்த ஓசையுடைய இருசொற்கள்
இணைந்தே வந்து,
பொருளின் சிறப்பை உயர்த்திக்
கூறுவதை
'இணைமொழி' என்பர்.

## பயிற்சி

**அ) பொருத்துக.**

| | |
|---|---|
| இன்பதுன்பம் | இரவும் பகலும் |
| அன்றும் இன்றும் | மகிழ்ச்சியும் வருத்தமும் |
| அல்லும் பகலும் | அப்பொழுதும் இப்பொழுதும் |

ஆ) படங்களுக்குப் பொருந்தும் இணைமொழிகளை எழுதுக.



______________________



______________________



______________________

## சுவைச்செய்தி

போர்த்துக்கீசிய நாட்டைச் சேர்ந்தவர் மெகல்லன் (1480 - 1521). இவர் கடற்பயணம் மேற்கொண்டு முதன்முதலில் உலகத்தைச் சுற்றிவந்தார். இவர், அட்லாண்டிக் பெருங்கடல் வழியாகத் தென்அமெரிக்காவின் முனையை அடைந்தார். அது பின்னர் 'மெகல்லன் நீர்ச்சந்தி' (Strait of Megallan) என்று அழைக்கப்பட்டது. தமது பயண வழிகளை வரைபடமாக வரைந்து குறித்துக் கொண்டார். இந்நிகழ்வு, பின்னாளில் கடற்பயணம் மேற்கொள்பவர்களுக்கு வரைபடத்தின் (Map) தேவையை உணர்த்தியது.



மெகல்லன்

## 4.5 மொழியோடு விளையாடுவோம்

முதலெழுத்தை மாற்றிப் புதிய சொல்லை உருவாக்குவோம்

| | | | |
|---|---|---|---|
| சொந்தம் | தந்தம் | வண்டு | |
| நுங்கு | | குயில் | |
| வயல் | | சிங்கம் | |
| செங்கல் | | அருவி | |
| மரம் | | யானை | |

## கருத்து விளக்கப்படம்




## வினாக்கள்

1. ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்துபவர்கள் யார்?
2. ஜல்லிக்கட்டு நடைபெறும் இடம் யாது?
3. ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு முன்பதிவு செய்ய வேண்டிய நாள் எது?
4. ஜல்லிக்கட்டிற்கு எந்த வாசல் வழியாக அனுமதி கிடையாது?
5. அனுமதிச்சீட்டு பெறாத காளைகளுக்கும் அனுமதி உண்டு. சரியா? தவறா?

## 4.6 கேட்டல் கருத்தறிதல்



### நெல்சன் மண்டேலா (1918 – 2013)

நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் காந்தி என்று அழைக்கப்பட்டார். ஏனெனில், அவரது போராட்டங்கள் காந்தியைப்போல அறவழியிலேயே நடத்தப்பட்டன. தென்னாப்பிரிக்காவின் அதிபராகப் பதவியேற்றதும் அவர் சென்ற முதல் வெளிநாடு இந்தியா. தென்னாப்பிரிக்காவில் வசித்த இந்திய மக்களுக்காகப் பள்ளிகளில் தமிழ், தெலுங்கு, இந்தி, குஜராத்தி, உருது ஆகிய மொழிகளைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தார்.

### வினாக்கள்

1. தென்னாப்பிரிக்காவின் காந்தி என்று அழைக்கப்பட்டவர் யார்?
2. தென்னாப்பிரிக்கப் பள்ளிகளில் இந்திய மக்களுக்காக எந்தெந்த மொழிகள் கற்பிக்கப்பட்டன?
3. மண்டேலா அதிபரானதும் சென்ற முதல் வெளிநாடு எது?
4. மண்டேலா யாருடைய வழியில் போராட்டங்களை நடத்தினார்?

## 4.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 4.8 செந்தமிழ்ச்செல்வம்

### புதிய ஆத்திசூடி

சொல்வது தெளிந்து சொல்

- பாரதியார்

(தெளிந்து - ஆராய்ந்து)

பொருள்:

சொல்வதை ஆராய்ந்து விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

## 4.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கடல் | - | Sea |
| 2. | நிலம் | - | Land |
| 3. | கப்பல் | - | Ship |
| 4. | உலகம் | - | World |
| 5. | பயணம் | - | Travel |
| 6. | கடற்பயணம் | - | Voyage |

## 4.10 செயல்திட்டம்

உங்களுக்குப் பிடித்த நாடுகளின் கொடிகளின் படங்களைத் திரட்டி, படத்தொகுப்பு ஒன்றைச் செய்து வருக.

5.1 பேசுவோம்

பாடம்
5



## கலந்துரையாடுவோம்

நீங்கள் விரும்பி அணியும் ஆடை, அணிகலன் குறித்து வகுப்பில் பேசுக.

## 5.2 படிப்போம்

# தமிழர் ஆடை, அணிகலன்





விமலா,
தமிழ்நாட்டிலிருந்து
எப்போது வந்தாய்?

கடந்த வாரம்தான் வந்தேன் இலக்கியா.
அங்கு என் அத்தை வீட்டுத்
திருமணத்தில் கலந்துகொண்டேன்.





நம் நண்பர்களுக்கு நீ அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்தேன். அதில் நீ அணிந்திருந்த ஆடையின் பெயர் என்ன?



ஓ அதுவா, பாவாடை, சட்டை. அவற்றைப் பட்டுத் துணியில் தைத்திருந்தார்கள். என் அம்மாகூடப் பட்டுப் புடவை அணிந்திருந்தார்.



உங்கள் அப்பா என்ன ஆடை அணிந்திருந்தார்?



அப்பா வேட்டியும் சட்டையும் அணிந்திருந்தார். அம்மா வகைவகையாய் அணிகலன்கள் அணிந்திருந்தார்.



அப்படியா? அவையெல்லாம் என்னென்ன?

அம்மா வளையல், தோடு, ஆரம், ஒட்டியாணம், மோதிரம், கொலுசு அணிந்திருந்தார். நானும் கால்களில் கொலுசு அணிந்திருந்தேன். நடக்கும்போது, எழுந்த 'ஜல்ஜல்' என்னும் ஒலி எனக்கு மிகவும் பிடித்திருந்தது.





அப்படியா? நீ வேறு என்னென்ன அணிகலன்கள் அணிந்திருந்தாய்?

என் கழுத்தில் முத்துமணி மாலையை அத்தை அணிவித்தார். அது எனக்கு அழகாக இருக்கிறது எனப் பாராட்டினார். மேலும் எனக்கு நெற்றிச்சுட்டி அணிவித்தார். இவற்றையெல்லாம் அணிந்தபோது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.





மிக்க மகிழ்ச்சி விமலா. நானும் என் அம்மாவிடம் இதைப் பற்றிச் சொல்லி மகிழ்வேன்.

நானும் மற்ற நண்பர்களிடம் இதைப் பற்றிச் சொல்வேன். சரி, வா! நாம் விளையாடச் செல்வோம்.



## பொருள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | புகைப்படம் | – | ஒளிப்படக் கருவியால் எடுக்கப்படும் உருவப்படம் |
| 2. | வளையல் | – | கையில் அணியும் அணிகலன் |
| 3. | தோடு | – | காதில் அணியும் அணிகலன் |
| 4. | ஆரம் | – | கழுத்தில் அணியும் அணிகலன் |
| 5. | ஒட்டியாணம் | – | இடுப்பில் அணியும் அணிகலன் |
| 6. | மோதிரம் | – | கைவிரலில் அணியும் அணிகலன் |
| 7. | கொலுசு | – | காலில் அணியும் அணிகலன் |
| 8. | நெற்றிச்சுட்டி | – | நெற்றியில் அணியும் அணிகலன் |

## விடை காண்போம்

1. விமலா எங்கு, எதற்காகச் சென்றிருந்தாள்?
2. விமலாவின் அப்பா அணிந்திருந்த ஆடையின் பெயர் என்ன?
3. விமலாவும் அவள் அம்மாவும் எந்தத் துணியாலான ஆடையை அணிந்திருந்தனர்?
4. விமலா கழுத்தில் அணிந்திருந்த அணிகலன் எதனால் ஆனது?
5. விமலா கூறிய அணிகலன்களுள் உனக்குப்பிடித்த அணிகலன் எது? ஏன்?

## 5.3 பாடிமகிழ்வோம்

### தொழிலைக் கற்போம்

தொழிலைக் கற்போமே! - கைத்
தொழிலைக் கற்போமே!

அழகுப் பூக்கள் பின்னலாம்;
ஆடை தைக்கக் கற்கலாம்;
உழவுத் தொழிலைச் செய்யலாம்;
ஓவி யங்கள் தீட்டலாம்!

கத்தரிக்கப் பழகலாம்;
காகிதப்பூ செய்யலாம்;
முத்து மாலை கோக்கலாம்;
முல்லைப் பூக்கள் தொடுக்கலாம்!

- வாணிதாசன்



## 5.4 தெரிந்துகொள்வோம்

பால்

| பால்/பகுப்பு | திணை | விளக்கம் | சான்று |
|---|---|---|---|
| ஆண்பால் | உயர்திணை | ஆணைக் குறிப்பது ஆண்பால் | கவின், மாணவன், சிறுவன், அரசன் |
| பெண்பால் | | பெண்ணைக் குறிப்பது பெண்பால் | செல்வி, மாணவி, சிறுமி, அரசி |
| பலர்பால் | | ஒருவருக்கும் மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால் | மாணவர்கள், மக்கள் |
| ஒன்றன்பால் | அஃறிணை | ஒன்றை மட்டும் குறிப்பது ஒன்றன்பால் | மரம், புலி, நாற்காலி |
| பலவின்பால் | | ஒன்றுக்கும் மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால் | மரங்கள், புலிகள், நாற்காலிகள் |

## பயிற்சிகள்

**(அ). விடுபட்ட கட்டங்களை நிரப்புக.**



(ஆ) பொருத்துக



பலர்பால்



ஆண்பால்



ஒன்றன்பால்



பலவின்பால்



பெண்பால்

(இ) கட்டத்தில் உள்ள எதிர்ப்பாலினச் சொற்களை வட்டமிட்டு எடுத்து எழுதுவோம்

| | | | |
|---|---|---|---|
| மா | சி | யை | பெ |
| ண | று | வ | ண் |
| வ | மி | ண் | மா |
| ன் | ன் | ஆ | மா |
| ன் | அ | த் | தை |
| மா | ண | வி | க் |

1. மாணவி X மாணவன்
2. அத்தை X ______________
3. ஆண் X ______________
4. சிறுவன் X ______________

## சுவைச்செய்தி

ஒவ்வொரு பூவுக்கும் ஒரு சிறப்பு உண்டு. மற்றப் பூக்களைவிடப் பருத்திப்பூவுக்குத் தனிச்சிறப்பு உண்டு. ஏன் தெரியுமா? நமது அடிப்படைத் தேவைகளுள் ஒன்று, ஆடை. நம் மானத்தைக் காக்கக்கூடிய ஆடை, பருத்தி இழையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அதனால்தான், பூக்களில் சிறந்தது, பருத்திப்பூ என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.



பருத்திப் பூ

## 5.5 மொழியோடு விளையாடுவோம்

குறிப்புகளைக் கொண்டு சொல் கோபுரம் உருவாக்குக.

1. மணக்கும் எழுத்து
2. பச்சை நிறப் பறவை
3. இரவில் மட்டுமே பார்க்கும் பறவை
4. காட்டுக்கு அரசன்
5. பாலைவனக் கப்பல்
6. மீன் உண்ணும் பறவை

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## 5.6 கேட்டல் கருத்தறிதல்

### தாக்கா மஸ்லின் துணிவகை



பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அரசர்களும் செல்வந்தர்களும் அணிந்து மகிழ்ந்த துணி வகை மஸ்லின். இது, வங்கதேசத்தின் பாரம்பரிய துணி வகை. இதைத் 'தாக்கா மஸ்லின்' என்று அழைத்தனர். இத்துணியை அணிந்தவருக்கு உடலில் ஆடை இருப்பது போலவே தோன்றாது. அந்த அளவுக்கு மென்மையாகவும் மிருதுவாகவும் இருக்கும். இத்துணியாலான சேலை ஒன்றை, சிறிய தீப்பெட்டிக்குள் அடைத்துவிடலாம். அந்த அளவிற்கு மெல்லிய இழைகளால் ஆனது, தாக்கா மஸ்லின் துணி. இத்துணியை நெய்வது வங்கதேசத்தின் பாரம்பரிய நூற்புக்கலையாகும். இக்கலையை, 2013 ஆம் ஆண்டு உலகின் தலைசிறந்த படைப்புகளின் பட்டியலில் யுனெஸ்கோ சேர்த்துள்ளது.

### வினாக்கள்

1. வங்கதேசத்தின் பாரம்பரியத் துணி வகை எது?
2. மஸ்லின் துணி எவ்வாறு அழைக்கப்பட்டது?
3. மஸ்லின் துணியாலான ஆடையை எதற்குள் அடைக்கலாம்?
4. மஸ்லின் ஆடை நூற்புக்கலை, தலைசிறந்த படைப்புகளின் பட்டியலில் எப்போது சேர்க்கப்பட்டது?
5. மஸ்லின் துணிவகை எந்த நூற்றாண்டைச் சார்ந்தது?

## 5.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 5.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

(குறள் - 636)
-திருவள்ளுவர்

(மதிநுட்பம் - அறிவுக்கூர்மை)

பொருள்:
நூலறிவுடன் இயற்கையான கூரிய அறிவு உள்ளவர்களுக்கு தீர்க்க முடியாத சிக்கல்கள் எதுவும் இல்லை.

## 5.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | அத்தை | - | Aunt |
| 2. | திருமணம் | - | Wedding |
| 3. | பட்டுத்துணி | - | Silk cloth |
| 4. | புடவை | - | Saree |
| 5. | பாவாடை | - | Skirt |
| 6. | சட்டை | - | Shirt |
| 7. | வேட்டி | - | Dhoti |
| 8. | வளையல் | - | Bangle |
| 9. | தோடு | - | Ear rings |
| 10. | கொலுசு | - | Anklet |
| 11. | மோதிரம் | - | Ring |
| 12. | அணிகலன் | - | Ornament |

## 5.10 செயல்திட்டம்

பல்வேறு நாடுகளில் வாழும் மக்கள் அணியும் ஆடை வகைகளின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்று செய்து வருக.

பாடம்
6

## 6.1 பேசுவோம்



மாரியப்பன் தங்கவேல்



அருனிமா சின்ஹா



நிக் உஜிசிக்



பீத்தோவன்



ஸ்டீபஃன் ஹாக்கிங்

### கலந்துரையாடுவோம்

சிறப்புத்தேவை உடையவர்கள் எந்தெந்தத் துறைகளில் சிறந்து விளங்குகின்றனர் என்பதைப் பற்றிக் கலந்துரையாடுக.

## 6.2 படிப்போம்

### ஹெலன் கெல்லர் (Helen Keller - 1880 - 1968)



தன்னம்பிக்கையுடன் வாழ்ந்து பல சாதனைகளைச் செய்தவர், ஹெலன் கெல்லர். இவர், அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளர். இவர், தமது சிறுவயதிலேயே கண்பார்வையையும் கேட்கும் திறனையும் இழந்தார். இவருடைய ஆசிரியர் ஆன் சல்லிவன் இவரைக் கண்ணும்கருத்துமாகக் கவனித்துக் கொண்டார். ஆசிரியரின் சிறந்த அணுகுமுறை, ஹெலன் கெல்லரின் வாழ்வில் தன்னம்பிக்கையைத் தந்தது. இவர், பார்வை இல்லாதவர்களுக்கு உதவும் பிரெய்லி எழுத்து முறையைக் கற்றுக்கொண்டார். பார்வையற்றவருக்கான பள்ளியில் படித்தார்; பின்னர் கல்லூரிப் படிப்பையும் முடித்தார். பார்வையிழந்த முதல் பட்டதாரிப் பெண் என்னும் பெருமையை இவர் பெற்றார். மேலும் இவர் தமது 14 புத்தகங்கள், கட்டுரைகள் மற்றும் சொற்பொழிவுகள் மூலம் தமக்கெனத் தனிமுத்திரையைப் பதித்தார்.

### பொருள் அறிவோம்

| | | |
|---|---|---|
| 1. தன்னம்பிக்கை | - | தன்னை முழுமையாக நம்புதல் |
| 2. சாதனை | - | அரிய செயல் |
| 3. அணுகுமுறை | - | நடந்துகொள்ளும் முறை |
| 4. பட்டதாரி | - | பட்டப் படிப்பு படித்தவர் |
| 5. பெருமை | - | சிறப்பு |
| 6. பிரெய்லி எழுத்துமுறை | - | பார்வையிழந்தவர்கள் படிப்பதற்காக உருவாக்கப்பட்ட எழுத்துமுறை |

### வினாக்கள்

1. ஹெலன் கெல்லரின் ஆசிரியர் யார்?
2. கண்ணும்கருத்துமாக என்பதன் பொருள் என்ன?
3. ஹெலன் கெல்லரின் சிறப்பு யாது?
4. ஹெலன் கெல்லர் எதன் மூலம் தனி முத்திரை பதித்தார்?
5. ஹெலன் கெல்லரைப்போல் தன்னம்பிக்கை கொண்ட ஒருவரைப் பற்றிக் கூறுக.
6. பார்வையிழந்தவர்களுக்குப் பயன்படும் எழுத்து முறை யாது?

## 6.3 பாடிமகிழ்வோம்

### பெண் கல்வி

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் - பாட

சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை!

சிலைபோல ஏனங்கு நின்றாய்? - நீ

சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?

விலைபோட்டு வாங்கவா முடியும்? - கல்வி

வேளைதோறும் கற்று வருவதால் படியும்!

மலைவாழை அல்லவோ கல்வி? - நீ

வாயார உண்ணுவாய் போ என் புதல்வி!

- பாரதிதாசன்



## 6.4 தெரிந்துகொள்வோம்

### ண, ந, ன ஒலி வேறுபாடு



அலுவலகத்தில் பணி கிடைத்தது.



காலைப்பொழுது பனி நிறைந்தது.



சுவரில் ஆணி அடித்தான்.




தமிழ் மாதங்களுள் ஒன்று ஆனி.



புத்தாண்டில் வாணம் வெடித்தனர்.



வானம் நீல நிறத்தில் இருக்கும்.



அவர்கள் தேநீர் உண்டனர்.



அகிலன் தேனீர் உண்டான்.



பிறருக்கு உதவும் மனம் வேண்டும்.



ஏலக்காய் மணம் வீசியது.



அம்மா பணம் கொடுத்தாள்.



குழந்தைகள் பனம்பழம் உண்கின்றனர்.

## பயிற்சிகள்

**பிழைகளை நீக்கி எழுதுக.**

1. என் மணம் மகிழ்ந்தது.

   ______________________________

2. பணிச்சறுக்கு விளையாட்டு எனக்குப் பிடிக்கும்.

   ______________________________

3. ஆணி மாதம் திருவிழா நடைபெறும்.

   ______________________________

4. பனம் கொடுத்துப் பொருள் வாங்கினான்.

   ______________________________

5. வாணில் நிலா தோன்றியது.

   ______________________________

6. என் தந்தை முன்னூறு ரூபாய் தந்தார்

   ______________________________

## 6.5 மொழியோடு விளையாடுவோம்

**பழங்களுக்குத் தரப்பட்டுள்ள எழுத்துகளைக் கொண்டு சொல் உருவாக்குக**



ன க ம் ண ப ல் வா



= வானம்



= ______________



= ______________



= ______________



= ______________

## தகவல் துளி

### பிரெய்லி எழுத்து முறை

பார்வையற்றோருக்கான எழுத்து முறையை உருவாக்கியவர் பிரெய்லி. அந்த எழுத்துமுறை அவர் பெயராலேயே அழைக்கப்படுகிறது. ஆறு புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு இது எழுதப்படுகிறது. அப்புள்ளிகளை விரல்நுனியால் தொட்டு எழுத்துகளை அறிந்துகொள்ளலாம். பார்வைத்திறன் குறைந்தவர்களுக்கான எளிதான எழுத்து முறை இது. பிரெய்லி பிறந்த ஜனவரி 4 ஆம் நாள் உலகப் பார்வையற்றோர் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.



பிரெய்லி

## 6.6 கேட்டல் கருத்தறிதல்

### உலக மாற்றுத்திறனாளிகள் நாள்



ஒவ்வொர் ஆண்டும் டிசம்பர் 3ஆம் நாள் உலக மாற்றுத்திறனாளிகள் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. 1992ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை இதற்கான தீர்மானத்தை நியூயார்க்கில் நிறைவேற்றியது. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வுக்காக இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. மேலும் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றிய புரிதலை மக்களிடம் ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாக உள்ளது. சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் மாற்றுத்திறனாளிகளின் பங்கினை எடுத்துச்சொல்லவும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

### வினாக்கள்

1. உலக மாற்றுத்திறனாளிகள் நாள் ஒவ்வோர் ஆண்டும் எந்த நாளில் கடைப்பிடிக்கப்படுகிறது?
2. உலக மாற்றுத்திறனாளிகள் நாளுக்கான தீர்மானத்தை நிறைவேற்றிய அமைப்பு எது?
3. உலக மாற்றுத்திறனாளிகள் நாளுக்கான தீர்மானம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?
4. உலக மாற்றுத்திறனாளிகள் நாள் எதற்காகக் கடைப்பிடிக்கப்படுகிறது?

## 6.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 6.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

(குறள் - 616)

-திருவள்ளுவர்

**பொருள்:**

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும், முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

## 6.9 அறிந்துகொள்வோம்

1. தன்னம்பிக்கை - Self confidence
2. சாதனை - Achievement
3. புகழ் - Fame
4. எழுத்தாளர் - Writer
5. ஆசிரியர் - Teacher
6. சிறப்புத்தேவை - Special needs
7. மாற்றுத்திறனாளி - Differently abled
8. அணுகுமுறை - Approach
9. பட்டதாரி - Graduate
10. பெருமை - Pride
11. இறைச்சி கடை - Meat shop

## 6.10 செயல்திட்டம்

சிறப்புத்தேவை உடையவர்களுக்கு உதவுவோம் என்னும் தலைப்பில் ஓவியம் ஒன்று வரைந்து வருக.

7.1 பேசுவோம்

# பாடம் 7



## கலந்துரையாடுவோம்

வனவிலங்குகளைப் பாதுகாக்க, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

## 7.2 படிப்போம்

### வனவிலங்குப் பாதுகாப்பு




விலங்குகள் காட்டின் செல்வங்கள். காடுதான் அவற்றின் வாழ்விடம். மனிதர்கள் தம் பொழுதுபோக்குக்காகவும் உணவுக்காகவும் விலங்குகளை வேட்டையாடினர். தம் தேவைக்காகக் காடுகளை அழித்தனர். இதனால், விலங்குகளின் எண்ணிக்கையும் காட்டுவளமும் குறைந்தன. இதனைத் தடுக்க, தற்போது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 3ஆம் நாள் 'உலக வனவிலங்கு நாள்' கொண்டாடப்படுகிறது. இதன்மூலம் வனவிலங்குகளைப் பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. ஆகவே, காடுகளை வளர்ப்போம்; வனவிலங்குகளைப் பாதுகாப்போம்.

### பொருள் அறிவோம்

1. செல்வங்கள் - மதிப்புமிக்க பொருள்கள்
2. வாழ்விடம் - இருப்பிடம்
3. வனவிலங்கு - காட்டில் வாழும் விலங்கு

### வினாக்கள்

1. காட்டின் செல்வங்கள் எவை?
2. விலங்குகளின் வாழ்விடம் எது?
3. மனிதர்கள் ஏன் விலங்குகளை வேட்டையாடினர்?
4. விலங்குகளைப் பாதுகாக்கப் பயன்படுவது எது?
5. காடு வளம் பெற நாம் என்ன செய்ய வேண்டும்?
6. 'உலக வனவிலங்கு நாள்' எப்போது கொண்டாடப்படுகிறது?

## பயிற்சிகள்

(அ) பின்வரும் படக்காட்சிகளுள் எது சரி? எது தவறு? என்பதை எழுதுக.













## 7.3 பாடிமகிழ்வோம்

### பாட்டுப் பாடுவேன்

பாட்டுப் பாடுவேன் – நான்

பாட்டுப் பாடுவேன்

பலரும் புகழ, இனிய தமிழில்

பாட்டுப் பாடுவேன்

கேட்டு மகிழவே – நீங்கள்

கேட்டு மகிழவே

கிளியின் மொழிபோல் இனிய தமிழில்

கீதம் பாடுவேன் – நான்

கீதம் பாடுவேன்

- அழ. வள்ளியப்பா



## 7.4 தெரிந்துகொள்வோம்

### ஒருமை, பன்மை

- ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை.
- ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை.

| ஒருமை | பன்மை |
|---|---|
| <br>சிறுத்தை | <br>சிறுத்தைகள் |
| <br>மரம் | <br>மரங்கள் |
| <br>கல் | <br>கற்கள் |
| <br>பூ | <br>பூக்கள் |
| <br>புறா | <br>புறாக்கள் |

| | |
|---|---|
|  குடைகள் பல வண்ணங்களில் உள்ளன |  பழங்கள் மேசையின் மீது இருந்தன |
|  பசுக்கள் புல்லை மேய்கின்றன |  தோட்டத்தில் புற்கள் வளர்ந்திருந்தன |

## பயிற்சிகள்

**(அ) படத்தில் உள்ள ஒருமைக்கு இணையான பன்மைச் சொற்களைப் பொருத்துக.**

| | |
|---|---|
|  | பற்கள் |
|  | கால்கள் |
|  | நகங்கள் |
|  | தலைகள் |
|  | காதுகள் |
|  | கண்கள் |

(ஆ) ஒருமை, பன்மைப் பெயர்களை எடுத்து எழுதுக.













| | | |
|---|---|---|
| முயல்கள் | கழுதை | ஒட்டகங்கள் |
| புறாக்கள் | இலை | குருவி |

## (இ) ஒருமைக்கான பன்மையை நிரப்புவோமா?



வீடு - வீடுகள்




சொல் - ____________________




மாதம் - ____________________



எறும்பு - ____________________



நிறம் - ____________________



தேனீ - ____________________

## 7.5 மொழியோடு விளையாடுவோம்

**இரு படத்தின் பெயர்களை இணைத்தால், மரபு விளையாட்டின் பெயர் கிடைக்கும். கண்டறிக.**

| | | |
|---|---|---|
|  |  | பச்சைக் குதிரை |
|  |  | |
|  |  | |
|  |  | |
|  |  | |

## சுவைச்செய்தி



இந்தியாவின் அசாம் மாநிலத்தில் காசிரங்கா தேசியப் பூங்கா (Kaziranga National Park) அமைந்துள்ளது. இங்கு அரிதான ஒற்றைக் கொம்புக் காண்டாமிருகங்கள் உள்ளன. உலகப்புகழ் பெற்ற இந்த ஒற்றைக் கொம்புக் காண்டாமிருகம் 'அசாமின் பெருமிதம்' (Pride of Assam) என்று கருதப்படுகிறது.

## கருத்து விளக்கப்படம்




**படத்தை உற்றுநோக்கிக் கீழே கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள ஊரின் பெயர்

   ______________________________

2. பறவைகள் சரணாலயத்தைச் சுற்றிப் பார்ப்பதற்குச் சிறந்த காலம்

   ______________________________

3. பறவைகள் சரணாலயத்தின் பரப்பளவு

   ______________________________

## 7.6 கேட்டல் கருத்தறிதல்

**யானை**



யானைகளைக் காடுகளின் காவலன் என்பர். வனங்களை வளர்ப்பதில் யானைகளுக்குப் பெரும்பங்கு உண்டு. யானைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. யானைகளின் தோல் மிகவும் கடினமானவை. கால்கள், தூண் வடிவில் இருப்பதால் எல்லா இடத்திலும் நடக்கும் தன்மை உடையன. யானைகளுக்கு நினைவுத்திறன் மிகுதி என்பதால் அவை தங்களது இடம்பெயர்வு வழித்தடங்களை நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டது. யானையைக் குறிப்பதற்குக் களிறு, வேழம், களபம் முதலான 170க்கும் மேற்பட்ட சொற்கள் உள்ளன. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே', 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பன யானையைக் குறிக்கும் பழமொழிகளாகும். தமிழ்நாட்டில் யானைகள் முகாம், முதுமலை வனவிலங்குக் காப்பகத்தில் அமைந்துள்ளது.

### வினாக்கள்

1. காடுகளின் காவலன் என எதைக் கூறுகிறோம்?
2. யானைகளின் கால்கள் எப்படி இருக்கும்?
3. யானையைக் குறிப்பிடும் வேறுசொல் கூறுக.
4. யானையைச் சிறப்பிக்கும் பழமொழி ஒன்று கூறுக.
5. தமிழ்நாட்டில் யானைகள் முகாம் எங்கு உள்ளது?

## 7.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 7.8 செந்தமிழ்ச்செல்வம்

### கொன்றை வேந்தன்

நல்லிணக்கம் அல்லது, அல்லல் படுத்தும்

(பாடல் – 48)

-ஔவையார்

(அல்லல் – துன்பம்)

பொருள்:

நல்லவர்களுடன் சேராமல் இருப்பது, ஒருவனுக்குத் துன்பத்தைத் தரும்.

## 7.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | விலங்குகள் | - | Animals |
| 2. | காடு | - | Forest |
| 3. | தேவை | - | Requirement |
| 4. | பாதுகாப்பு | - | Protection |
| 5. | சட்டம் | - | Law |
| 6. | வேட்டையாடுதல் | - | Hunting |
| 7. | அரிது | - | Rare |
| 8. | விழிப்புணர்வு | - | Awareness |
| 9. | ஒருமை | - | Singular |
| 10. | பன்மை | - | Plural |

## 7.10 செயல்திட்டம்

விலங்குகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்கிக் காட்டுக.

பாடம் 8

## 8.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மலைவளம் எவ்வாறெல்லாம் உதவுகின்றது என்பது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

## 8.2 படிப்போம்




தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். தாம் படைத்த நூல்களில் இயற்கையைப் போற்றி மகிழ்ந்தனர். அவற்றுள் ஒன்று, திருக்குற்றாலக் குறவஞ்சி. இந்நூலில் குற்றால மலையின் வளம் அழகாகக் கூறப்பட்டுள்ளது. "தென்றல் அசைந்துவரும் தென் தமிழ்நாட்டில் இம்மலை அமைந்துள்ளது. இங்குக் கோங்கு, வேங்கை முதலிய மரங்கள் ஓங்கி வளரும். குரவம், முல்லை, செண்பக மலர்கள் மணம் வீசும். கோல மயில்கள் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் பாட்டு இசைக்கும். இத்தகைய சிறப்பு வாய்ந்த மலையிலிருந்து வெண்மையான அருவிநீர் விழும். இதன் துளிகள் சிதறும்போது, மெல்லிய புகைபோல் தோன்றும். இங்கு வாழும் மக்கள், கிழங்குகளைத் தோண்டி எடுப்பர்; தேனும், தினைமாவும் உண்பர்" என்னும் செய்திகளைக் குறமகள் ஒருத்தி கூறுவதுபோல் இந்நூலில் பாடல்கள் உள்ளன.

## பொருள் அறிவோம்

1. இயைந்து வாழ்தல் – சேர்ந்து வாழ்தல்
2. போற்றுதல் – வாழ்த்துதல்
3. குறவஞ்சி – சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று
4. தென்றல் – தெற்கிலிருந்து வீசும் மென்மையான காற்று

## வினாக்கள்

1. குற்றால மலையின் சிறப்பைக் கூறும் நூல் எது?
2. குற்றாலமலையில் காணப்படும் மரங்கள் யாவை?
3. குற்றால மலையில் மணம் வீசும் மலர்களின் பெயர்களைக் கூறுக.
4. தேன் உண்ட வண்டுகள் என்ன செய்கின்றன?
5. குற்றால மலையிலிருந்து விழும் அருவி நீரின் சிறப்பைக் கூறுக.
6. குற்றால மலையில் வாழும் மக்கள் எவற்றை உணவாக உட்கொள்கின்றனர்?

## 8.3 பாடிமகிழ்வோம்

### பூத்ததே!

சின்னத் தம்பி சிரிப்பைப் போலச்
செடியில் முல்லை பூத்ததே! – வீட்டுச்
செடியில் முல்லை பூத்ததே!
சின்ன அக்கா சிரிப்பைப் போலச்
செந்தா மரையும் பூத்ததே! – குளச்
செந்தா மரையும் பூத்ததே!
அம்மா சிரிக்கும் சிரிப்பைப் போல
அல்லி மலரும் பூத்ததே! – செவ்
வல்லி மலரும் பூத்ததே!
அப்பா சிரிக்கும் சிரிப்பைப் போல
அழகு ரோசா பூத்ததே! - முள்
அழகு ரோசா பூத்ததே!

- வாணிதாசன்



## 8.4 தெரிந்துகொள்வோம்

### எண்ணுப்பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒன்று | 10 | பத்து |
| 2 | இரண்டு | 20 | இருபது |
| 3 | மூன்று | 30 | முப்பது |
| 4 | நான்கு | 40 | நாற்பது |
| 5 | ஐந்து | 50 | ஐம்பது |

| | | | |
|---|---|---|---|
| 6 | ஆறு | 60 | அறுபது |
| 7 | ஏழு | 70 | எழுபது |
| 8 | எட்டு | 80 | எண்பது |
| 9 | ஒன்பது | 90 | தொண்ணூறு |
| 10 | பத்து | 100 | நூறு |

## பயிற்சிகள்

**(அ) சரியான எண்ணைத் தேர்ந்தெடுத்து வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| ஐம்பது | 01 | 50 | 05 |
| இருபது | 20 | 02 | 02 |
| எண்பது | 08 | 8 | 80 |
| பத்து | 10 | 100 | 1 |
| அறுபது | 6 | 60 | 06 |
| தொண்ணூறு | 9 | 09 | 90 |
| முப்பது | 3 | 30 | 03 |
| எழுபது | 07 | 70 | 7 |
| நூறு | 10 | 01 | 100 |
| நாற்பது | 40 | 04 | 4 |

**(ஆ) பொருத்துக.**

| | |
|---|---|
| 40 | முப்பது |
| 80 | ஐம்பது |
| 30 | நாற்பது |
| 90 | எழுபது |
| 50 | எண்பது |
| 70 | தொண்ணூறு |

(இ) பொருளும் அதற்கான விலையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
பொருள்களுக்கான விலைகளைக் கூட்டி எண்ணுப்பெயரால் எழுதுக.



பத்து



இருபது



முப்பது



நாற்பது

| | | | |
|---|---|---|---|
|  |  |  | |
|  |  |  | |
|  |  |  | |
|  |  |  | |
|  |  |  | |

## தகவல் துளி

உலகின் மிக நீளமான மலைத்தொடர் 'ஆண்டிஸ் மலைத்தொடர்' (Andes). இந்த மலைத்தொடரில் உயரமான மலை முகடாக இருப்பது 'அக்கோன்காகுவா' ஆகும். இங்கு, உலகின் மிக உயரமான எரிமலை உள்ளது. இந்த மலைத்தொடரானது தென் அமெரிக்காவில் உள்ள அர்ஜென்டினா, பொலிவியா, சிலி, கொலம்பியா, ஈக்வெடோர், பெரு, வெனிசூலா ஆகிய ஏழு நாடுகளிலும் பரந்து விரிந்துள்ளது. இந்நாடுகளை 'ஆண்டிஸ் நாடுகள்' என்றும் அழைப்பர்.



ஆண்டிஸ் மலைத்தொடர்

## 8.5 மொழியோடு விளையாடுவோம்

குறிப்புகளைப் படித்துக் கட்டத்தை நிரப்புக.




1. மருத்துவ குணம் மிக்க ஒரு பூ.
2. குளத்தில் பூக்கும் பூக்களுள் ஒன்று.
3. தமிழ்ச் சங்கம் இருந்த நகரம்.
4. ஔவையாரின் நூல்களுள் ஒன்று.
5. கால்நடைகளைக் குறிக்கும் சொல்.
6. கொடியில் காய்க்கும் ஒரு காய்.
7. வேகமாக ஓடும் ஒரு விலங்கு.
8. பருப்பு வகைகளுள் ஒன்று.

## 8.6 கேட்டல் கருத்தறிதல்

### குற்றால அருவி



குற்றாலம் தமிழ்நாட்டின் தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது தென்னகத்தின் "ஸ்பா" என்று அழைக்கப்படுகிறது. குற்றாலத்தில் ஒன்பது அருவிகள் உள்ளன. அவற்றுள் பேரருவியே முதன்மையான அருவியாகும். பேரருவிக்குமேல் சிற்றருவி அமைந்துள்ளது.

பேரருவியிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் செண்பகாதேவி அருவி உள்ளது. செண்பகாதேவி அருவியின் மேல்பகுதியில் தேனருவி உள்ளது. இங்குப் பல தேன்கூடுகள் அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது. தேனருவி அருகே பாலருவி அமைந்துள்ளது.

குற்றாலத்திலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது ஐந்தருவி; ஐந்து கிளையாகப் பிரிந்துள்ளதால் இதனை ஐந்தருவி என்பர். பழத்தோட்ட அருவியை விஜபி நீர்வீழ்ச்சி என்று அழைப்பர். புலிகள் அடிக்கடி வந்து செல்லும் அருவிக்குப் புலி அருவி என்று பெயர். பழைய குற்றாலம் அருவி அழகனாற்றில் அமைந்துள்ளது.

### வினாக்கள்

1. குற்றாலம், தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
2. குற்றாலத்தில் எத்தனை அருவிகள் உள்ளன?
3. எந்த அருவியின் மேல்பகுதியில் தேனருவி உள்ளது?
4. குற்றாலத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் ஐந்தருவி உள்ளது?
5. புலிகள் அடிக்கடி வந்து செல்லும் அருவியின் பெயர் என்ன?

## 8.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 8.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

(குறள்-108)

-திருவள்ளுவர்

**பொருள்:**

பிறர் செய்த உதவியினை மறப்பது நல்லதன்று. அவர் செய்த தீமையினை அப்போதே மறப்பது நல்லதாகும்.

## 8.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | இயற்கை | - | Nature |
| 2. | மலை | - | Mountain |
| 3. | மரங்கள் | - | Trees |
| 4. | வண்டு | - | Beetle |
| 5. | மயில் | - | Peacock |
| 6. | மலர்கள் | - | Flowers |
| 7. | அருவி | - | Waterfall |
| 8. | தேன் | - | Honey |
| 9. | பாட்டு | - | Song |
| 10. | நறுமணம் | - | Fragrance |

## 8.10 செயல்திட்டம்

அருவி ஒன்றின் முப்பரிமாண மாதிரியைச் செய்து வருக.

# மீள்பார்வை

## பயிற்சிகள்

**1. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| ஓலைச்சுவடிகள் | நாடக அரங்கு | கடற்பயணம் | இலக்கியம் |
| அணிகலன் | தன்னம்பிக்கை | விழிப்புணர்வு | இயற்கை |

**2. பின்வரும் குறளைப் படித்துக்காட்டுக.**

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

**3. பின்வரும் பாடலைப் பாடிக்காட்டுக.**

பாட்டுப் பாடுவேன் – நான்
பாட்டுப் பாடுவேன்
பலரும் புகழ இனிய தமிழில்
பாட்டுப் பாடுவேன்
கேட்டு மகிழவே – நீங்கள்
கேட்டு மகிழவே
கிளியின் மொழிபோல் இனிய தமிழில்
கீதம் பாடுவேன் – நான்
கீதம் பாடுவேன்

**4. பின்வரும் உரைப்பகுதியைப் படிக்கக் கேட்டு, விடை கூறுக.**

அரசர் மாலைநேரத்தில் உலாவச் சென்றார். அவர் செல்லும் வழியில் முதியவர் ஒருவர் மரக்கன்று ஒன்றை நட்டுக் கொண்டிருந்தார். அவர் அருகில் சென்ற அரசர், "இந்தத் தள்ளாத வயதில் ஏன் மரக்கன்று நடுகிறீர்கள்? இந்தக் கன்று வளர்ந்து, பயன் தருவதற்கு நெடுநாள் ஆகுமே? " என்று கேட்டார். அதற்கு அந்த முதியவர், "நீங்கள் நினைத்தது சரிதான். இந்தக் கன்று வளர்ந்து மரமாகும்வரை நான் இருப்பேன் என்று சொல்லமுடியாது. ஆனால், என் முன்னோர்கள் நட்டு வைத்த மரக்கன்றுகளால் நான் பெரிதும் பயனடைந்துள்ளேன். அதுபோல, நான் இப்போது நட்டு வைக்கும் கன்றுகள், எனக்குப் பின்னே வருபவர்களுக்குப் பயன் அளிக்கும் அல்லவா, அதனால்தான் நட்டு வைக்கிறேன்" என்று விடையளித்தார். முதியவர் கூறியதைக் கேட்டு, அரசர் வியப்படைந்தார்.

### வினாக்கள்

1. அரசர் உலாவச் செல்லும்போது, யாரைப் பார்த்தார்?
2. முதியவர் என்ன செய்து கொண்டிருந்தார்?

3. அரசர், முதியவரின் செயலைப் பார்த்து என்ன கேட்டார்?

4. அரசர் கேட்ட கேள்விக்கு முதியவர் கூறிய பதில் என்ன?

5. கதையின் மூலம் வெளிப்படும் நற்பண்பு யாது?

## 5. படம் பார்த்துக் கதை கூறுக.



## 6. சரியான பொருளுடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | போற்றுதல் | - | பாதுகாத்தல் |
| 2. | அச்சிடுதல் | - | கூறுதல் |
| 3. | மொழிதல் | - | வாழ்த்துதல் |
| 4. | ஓம்புதல் | - | மலர்தல் |
| 5. | பூத்தல் | - | பதிப்பித்தல் |

## 7. எதிர்ச்சொற்களுடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | தோன்றும் | X | முடிவு |
| 2. | நிறையும் | X | அழிவு |
| 3. | தொடக்கம் | X | மறையும் |
| 4. | ஏற்றம் | X | குறையும் |
| 5. | ஆக்கம் | X | இறக்கம் |

## 8. கீழ்க்காணும் ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.

1. வில் - ______________________
2. பூ - ______________________
3. மலை - ______________________
4. பழம் - ______________________
5. முள் - ______________________

## 9. கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மல்லிகையின் ______________ என்னைக் கவர்ந்தது. (மனம் / மணம்)
2. எழிலி ஆசிரியராகப் ______________ செய்கிறாள். (பணி / பனி)
3. நேற்றிரவு ______________ பெய்தது. (மலை / மழை)
4. உணவுப் பயிர்களுள் ஒன்று ______________. (திணை / தினை)
5. இன்று ______________ க்கு விடுமுறை. (பள்ளி / பல்லி)

## 10. கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**(ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்)**

1. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது ______________.
2. ஆணை மட்டும் குறிப்பது ______________.
3. ஒருவருக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது ______________.
4. ஒன்றை மட்டும் குறிப்பது ______________.
5. பெண்ணை மட்டும் குறிப்பது ______________.

11. விடுபட்ட கட்டத்தை நிரப்புக.




12. குறிப்புகளைப் படித்து, விடைகளைக் கண்டறிக.




1. மரத்தில் ஒரு 'ளை' = கிளை
2. பழத்தில் ஒரு 'ளை' = ________
3. நிறத்தில் ஒரு 'ளை' = ________
4. விலங்கில் ஒரு 'ளை' = ________
5. நீர், நிலம் இரண்டிலும் வாழும் ஒரு 'ளை' = ________
6. மீனில் ஒரு 'ளை' = ________

**13. தொடருக்குப் பொருத்தமான இடைச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(கீழ், போல, என, உடன், இருந்து, மேல், ஆக)**

1. வீட்டுக் கூரையின் ____________ சேவல் இருந்தது.
2. அண்ணன் ____________ தம்பியும் சென்றான்.
3. மலையில் ____________ அருவி நீர் விழுகிறது.
4. கவின் வகுப்புத் தலைவன் ____________ உள்ளான்.
5. என் கையெழுத்தைப் ____________ வள்ளியின் கையெழுத்து உள்ளது.

**14. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. Happiness -
2. Characters -
3. Protection -
4. Ship -
5. World -
6. Animals -
7. Nature -
8. Honey -
9. Fragrance -
10. Pride -

**15. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை கூறுக.**

1. 'தமிழ்த்தாத்தா' என அழைக்கப்படுபவர் யார்?
2. 'நவீன ஆங்கில இலக்கியத்தின் தந்தை' என யாரைக் கூறுகிறோம்?
3. தமிழரின் பண்பாட்டுச் சிறப்பைக் கூறும் நூல் எது?
4. கொலம்பஸ் தமக்கு மிகவும் பிடித்த செயல் என்று எதனைக் கூறுகிறார்?
5. பெண்கள் கையில் அணியும் அணிகலன் எது?
6. ஹெலன் கெல்லரின் ஆசிரியர் பெயரைக் கூறுக.
7. குற்றால மலையின் சிறப்பைக் கூறும் நூல் எது?
8. வனவிலங்குப் பாதுகாப்பு நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?
9. 'அமெரிக்கா' என்னும் நிலப்பகுதியைக் கண்டறிந்தவர் யார்?
10. பார்வை இழந்தவர்களுக்குப் பயன்படும் எழுத்துமுறை யாது?

16. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக.

1. மக்களைக் குறிக்கும் திணை எது?
2. பெயரையோ வினையையோ சார்ந்துவரும் சொல் எது?
3. 'விடாப்பிடி' என்னும் மரபுத்தொடரின் பொருள் என்ன?
4. என் மணம் மகிழ்ந்தது – இத்தொடரிலுள்ள பிழையை நீக்குக.
5. 'அல்லும்பகலும்' – இந்த இணைமொழியைக் கொண்டு தொடர் உருவாக்குக.
6. 90 – இந்த எண்ணுக்குரிய எண்ணுப்பெயரை எழுதுக.
7. அறுபது – இந்த எண்ணுப்பெயருக்குரிய எண்ணைக் குறிப்பிடுக.
8. மரம் – இச்சொல்லுக்குரிய பன்மைச் சொல்லை எழுதுக.
9. பற்கள் – இச்சொல்லுக்குரிய ஒருமைச் சொல்லை எழுதுக.
10. பலவின்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

17. பின்வரும் அறிவிப்பு அல்லது விளம்பரத்தைப் படித்து, வினாக்களுக்கு விடை கூறுக.




1. கொடுக்கப்பட்ட விளம்பரம் எதனைப் பற்றியது?
2. கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. கண்காட்சியில் இடம்பெறும் பொருள்கள் யாவை?
4. எத்தனை ரூபாய்க்குமேல் வாங்கினால் இலவசப் பரிசுகள் பெறலாம்?
5. கண்காட்சி எத்தனை நாள்களுக்கு நடக்கிறது?

9.1 பேசுவோம்

# பாடம் 9



ஏ.பி.ஜே. அப்துல் கலாம்



சி.வி. ராமன்



ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்



கமலா ஹாரிஸ்

## கலந்துரையாடுவோம்

கல்வியால் உயர்ந்த மனிதர்களைப் பற்றி உங்கள் வகுப்பில் கலந்துரையாடுக.

## 9.2 படிப்போம்

# கல்வியே அழியாச்செல்வம்



கல்விக்கு எல்லை இல்லை. நம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்கலாம். நம்மிடம் இருக்கும் பொருள்கள் எப்போதும் நிலையானவை அல்ல. அவை அழியக்கூடியவை. ஆனால், அழியாத செல்வமாக இருப்பது, கல்வியே ஆகும். உங்களது கல்விச்செல்வத்தை நீங்கள் அளவின்றிப் பிறர்க்கு வழங்கலாம். ஏனெனில், கல்விச்செல்வம் கொடுக்கக், கொடுக்கக் குறையாமல் வளரும். கற்றவர்களையே இவ்வுலகம் போற்றுகிறது. கற்றோர்க்குச் செல்லும் இடமெல்லாம் சிறப்பாக அமையும்.

## பொருள் அறிவோம்

1. அழியாச் செல்வம் – அழியாத செல்வம் (நிலையான செல்வம்)
2. எல்லை – வரம்பு

## வினாக்கள்

1. கல்விச் செல்வத்தின் சிறப்பு யாது?
2. கற்றோர்க்குச் செல்லும் இடமெல்லாம் சிறப்பாக அமையக் காரணம் என்ன?
3. கல்விச்செல்வம் – பொருட்செல்வம் இவற்றுள் சிறந்தது எது? ஏன்?
4. கொடுக்கக், கொடுக்கக் குறையாமல் வளர்வது எது?
5. கற்றவர் – கல்லாதவர் இவர்களுள் மதிக்கப்படுபவர் யார்? ஏன்?

## 9.3 பாடிமகிழ்வோம்

# கல்வி

கல்வியுள்ளவரே கண்ணுள்ளார் என்னலாம்
கல்வியில்லாதவர் கண் புண்ணென்றே பன்னலாம்
கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை!
கற்பதுவேஉன் முதற் கடமை

இளமையிற் கல்லென இசைக்கும் ஔவையார்
இன்பக் கருத்தை நீ சிந்திப்பாய் செவ்வையாய்
இளமை கழிந்திடில் ஏறுமோ கல்விதான்?
இப்பொழுதே உண் இனித்திடும் தேன்

- பாரதிதாசன்



## 9.4 தெரிந்துகொள்வோம்

### பெயரெச்சம் - வினையெச்சம்



படித்த மாணவன்



படித்து முடித்தான்



ஓடும் மான்



ஓடி மறைந்தது



சிரித்த குழந்தை



சிரித்து மகிழ்ந்தது



பறக்கின்ற பறவை



பறந்து சென்றது



ஆடிய மாதவி



ஆடி முடித்தாள்



பாய்ந்த பூனை



பாய்ந்து பிடித்தது

பெயரைக்கொண்டு முடியும் எச்சம், பெயரெச்சம்.

வினையைக்கொண்டு முடியும் எச்சம், வினையெச்சம்.

## பயிற்சிகள்

### (அ) பொருத்தமானதைக் கண்டறிந்து எழுதுக.

1. மரத்தில் தாவிய குரங்கு.

   பழத்தைத் தாவிப் பிடித்தது. (தாவிப் /தாவிய)

2. ______________________ கரும்பு.

   ______________________ தின்றான். (கடித்துத் /ஒடித்த)

3. ______________________ பாடல்.

   ______________________ சென்றான். (பாடிய / பாடிச்)

4. தோகை ______________________ மயில்.

   தோகை ______________________ ஆடியது. (விரித்து /விரித்த)

5. ______________________ பாடம்.

   ______________________ எழுதினான். (கேட்ட /கேட்டு)

### (ஆ) பொருந்தாத எச்சத்தை வட்டமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பாடிய | ஓடிய | ஆடிய | கடித்து |
| 2. | படித்த | சிரித்து | பறந்து | ஆடி |
| 3. | தாவிய | பிடித்த | கேட்டு | கேட்ட |
| 4. | பாய்ந்து | சிரித்த | படித்து | ஓடி |

## 9.5 மொழியோடு விளையாடுவோம்

**ஒரே உருவமுடைய பறவை அல்லது விலங்கினுடைய எழுத்துகளை வரிசை முறையில் சேர்த்து சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
|  4)ர் |  2)ல் |  2)சி |  3)ளி |  2)ண |  4)க |
|  1)ஆ |  1)பு |  2)ள் |  1)ப |  1)பூ |  3)வ |
|  3)த |  1)ப |  3)வி |  1)மா |  4)ய |  5)ம் |
|  1)க |  3)கை |  5)ர் |  2)த் |  2)ல |  3)ரி |

சான்று

1. பலகை 2. ________ 3. ________ 4. ________ 5. ________

## தகவல் துளி


காமராஜர்

காமராஜர் முதல்வராக இருந்தபொழுது மருத்துவக் கல்லூரியில் சேர்க்கை நடந்தது. ஐந்து இடத்திற்கு ஐம்பது மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். இரண்டு நாள் ஆகியும் அதிகாரிகளால் மாணவர்களைத் தேர்வு செய்ய முடியவில்லை. இதனை அறிந்த காமராஜர் விண்ணப்பங்களைப் பார்த்து, இரண்டு மணித்துளிகளில் மாணவர்களைத் தேர்வு செய்தார். வியப்படைந்த அதிகாரிகள் எப்படி முடிந்தது எனக் கேட்டனர். அதற்குக் காமராஜர் "வந்திருந்த விண்ணப்பங்களில் பெற்றோர் கையொப்பம் என இருந்த இடத்தில் கைரேகை வைத்திருந்த விண்ணப்பங்களைத் தேர்வு செய்தேன். படிக்காதவர்களின் பிள்ளைகள் மருத்துவம் படிக்கட்டுமே! என்றார்".

## 9.6 கேட்டல் கருத்தறிதல்

### கூகுள் தலைமைச் செயல் அலுவலர் சுந்தர்பிச்சை



தமிழ்நாட்டிலுள்ள மதுரையில் பிறந்தவர் சுந்தர்பிச்சை. கரக்பூரிலுள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐஐடி)-யில் பொறியியல் பட்டம் பயின்றார். பின்னர், அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ். பட்டம் பெற்றார். உலகப் புகழ்பெற்ற பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ. பட்டம் பெற்றார். பள்ளிக் காலத்திலிருந்தே தொலைபேசி எண்களை நினைவில் வைத்திருப்பதில் சுந்தர்பிச்சைக்குத் தனித்திறன் இருந்துவந்தது. 2004ஆம் ஆண்டில் கூகுள் நிறுவனத்தில் இணைந்தார். இவரது மேற்பார்வையின்கீழ் கூகுள் க்ரோம், ஆண்ட்ராய்ட் ஆகியவை உருவாக்கப்பட்டன. கூகுள் தேடல், விளம்பரம், கூகுள் மேப் மற்றும் யூ டியூப் உள்ளிட்ட தயாரிப்புகளிலும் சுந்தர்பிச்சையின் பங்களிப்பு முதன்மையானது. இதனால், 2015ஆம் ஆண்டு கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலராக நியமிக்கப்பட்டார்.

### வினாக்கள்

1. கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் யார்?
2. சுந்தர்பிச்சை எந்த ஊரைச் சேர்ந்தவர்?
3. எந்தப் பல்கலைக்கழகத்தில் சுந்தர்பிச்சை எம்.எஸ். பட்டம் பெற்றார்?
4. எந்த ஆண்டு சுந்தர்பிச்சை கூகுள் நிறுவனத்தில் இணைந்தார்?
5. எதனை நினைவில் வைத்திருப்பதில் சுந்தர்பிச்சை தனித்திறன் கொண்டிருந்தார்?

## 9.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்









## 9.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(குறள் - 400)

-திருவள்ளுவர்

(கேடில் - அழிவில்லாத; விழுச்செல்வம் - சிறந்த செல்வம்; மாடல்ல - செல்வம் அல்ல)

**பொருள்:**

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் யாவும் செல்வம் அல்ல.

## 9.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்வி | - | Education |
| 2. | தொடர்ந்து | - | Continuously |
| 3. | நிலையானது | - | Permanent |
| 4. | செல்வம் | - | Wealth |
| 5. | கற்றவர் | - | Learned |
| 6. | அழியக்கூடியவை | - | Perishable |
| 7. | இடம் | - | Place |
| 8. | சிறப்பு | - | Special |
| 9. | கைரேகை | - | Fingerprint |

## 9.10 செயல்திட்டம்

பள்ளிக்கூட மாதிரி ஒன்றைச் செய்து வருக.

பாடம் 10

## 10.1 பேசுவோம்







| | | |
|---|---|---|
| பாம்பு | | |
| கதவு | | |
| நண்டு | | |
| அணில் | | |
| புத்தகம் | | |
| கண்ணாடி | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம் | க | த | த் | பு | அ |
| உ | ழ | வி | டி | த | ணி |
| பா | ம் | பு | ணா | ஆ | ல் |
| ற் | ப | கா | ண் | ய் | ள் |
| ட | து | த் | க | த | வு |
| க | ன் | ந | ண் | டு | ன் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | | | | |
| | | | 1 | 9 | 5 | | | |
| | | 8 | | | | | 6 | |
| 8 | | | | 6 | | | | |
| 4 | | | 8 | | | | | 1 |
| | | | | 2 | | | | |
| | 6 | | | | | 2 | 8 | |
| | | | 4 | 1 | 9 | | | 5 |
| | | | | | | | 7 | |



எத்தனை சதுரங்கள் உள்ளன?

## கலந்துரையாடுவோம்

நீங்கள் விரும்பி விளையாடும் அறிவுத்திறன் சார்ந்த விளையாட்டுகள் பற்றி உங்கள் வகுப்பில் கலந்துரையாடுக.

## 10.2 படிப்போம்

### மதிநுட்பம்







ஆஹா, நாம் கற்றுக்கொண்ட வித்தைகளைச் செய்து பார்க்க நல்ல வாய்ப்பு கிடைத்தது. இந்தச் சிங்கத்திற்கு உயிர் கொடுப்போமா?
அப்படிச் செய்யாதீர்கள். சிங்கம் கொடிய விலங்கு. அது, உயிர் பெற்று எழுந்தால், நம்மைக் கொன்றுவிடும்.


நீ சொல்வதை நாங்கள் கேட்கப் போவதில்லை.
அப்படியா, சரி. நான் அந்த மரத்தின் மீது ஏறிக்கொள்கிறேன். நீங்களும் உயிர் பிழைக்க முயற்சி செய்யுங்கள்.







## பொருள் அறிவோம்

1. மதிநுட்பம் – அறிவுக்கூர்மை
2. வித்தை – குறிப்பிட்ட செயலில் பெறும் திறமை
3. சோதித்தல் – ஆராய்தல்

## வினாக்கள்

1. மாணவர்கள் செல்லும் வழியில் எதனைப் பார்த்தார்கள்?
2. மாணவர்கள் கற்றுக்கொண்ட வித்தை யாது?
3. சிங்கத்திற்கு உயிர் கொடுக்கக் கூடாது என்று மாணவன் கூறக் காரணம் என்ன?
4. மாணவர்களுள் மதிநுட்பம் கொண்டவர் யார்? அவரை நீங்கள் எவ்வாறு கண்டுபிடித்தீர்கள்?

## 10.3 பாடிமகிழ்வோம்

### ஓடி வா!

கண்ணே! தமிழே! ஓடி வா!
　　காலைப் பூவே! ஓடி வா!
பெண்ணே! சிட்டே! ஓடி வா!
　　பேசும் நிலவே! ஓடி வா!
அழகே! திருவே! ஓடி வா!
　　அன்பே பண்பே! ஓடி வா!
பழமே! தேனே! ஓடி வா!
　　பாட்டைக் கேட்டே! ஓடி வா!
முத்தே! சுடரே! ஓடி வா!
　　முகிலே! மழையே! ஓடி வா!
சொத்தே! சுகமே! ஓடி வா!
　　சுனையே! பொழிலே! ஓடி வா!

- வயலூர் சண்முகம்



## 10.4 தெரிந்துகொள்வோம்

### ர, ற ஒலிவேறுபாடு



பறவை உயரே பறந்தது



பரவையில் படகு மிதந்தது



மரம் நிழல் தரும்



மறம் வெற்றி தரும்



தம்பிக்கு அரைப்பழம் கொடு



நான் படிக்கும் அறை



விளக்கு சுடர்விட்டு எரிந்தது



வெண்ணிலா ஈட்டி எறிந்தாள்



மெரினா அழகிய கடற்கரை



சட்டையில் கறை உள்ளது



பொரி உருண்டை சுவையாக இருக்கும்



பொறிக்குள் எலி சிக்கியது

## பொருள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பறவை | – | பறக்கும் உயிரினம் |
| 2. | பரவை | - | கடல் |
| 3. | மரம் | – | தாவரம் |
| 4. | மறம் | – | வீரம் |
| 5. | அரை | – | பாதி |
| 6. | அறை | – | வீட்டின் பகுதி |
| 7. | எரி | – | தீ எரிதல் |
| 8. | எறி | – | வீசு |
| 9. | கரை | – | கடற்கரை |
| 10. | கறை | – | அழுக்கு |
| 11. | பொரி | – | உணவுப்பொருள் |
| 12. | பொறி | - | இயந்திரம் |

## பயிற்சி

### சரியானதை எடுத்து எழுதுவோம்

1. ஆற்றின் ஓரம் ______________________

   ஆடையில் படிவது ______________________ (கறை / கரை)

2. தென்னை ஒருவகை ______________________

   மன்னருக்கு வேண்டும் ______________________ (மறம் / மரம்)

3. ஒன்றில் பாதி ______________________

   சமைக்கும் இடம் சமையல் ______________________ (அரை / அறை)

4. பழைய பொருள்களை நெருப்பால் ______________________

   துன்பங்களைத் தூக்கி ______________________ (எறி / எரி)

5. அரிசியிலிருந்து கிடைப்பது ______________________

   எலியைப் பிடிக்க உதவுவது ______________________ (பொரி / பொறி)

## 10.5 மொழியோடு விளையாடுவோம்

ஒரே எழுத்தினை இரு கட்டத்திலும் நிரப்பிச் சொல் உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| ப | ம் | ப | ர | ம் |
| க | | ப | | |
| | த் | | | |
| | ந் | | ம் | |
| மா | | ப | ழ | |
| | ர | | ம் | |
| | டி | | ம் | |
| வி | | ட | | வி |
| | ளி | ப் | | |
| | ப் | | | |
| | ர | ங் | | |
| க | ட் | | | ம் |



### தகவல் துளி

"வாழ்க்கை கடினம்தான். ஆனால், வெற்றிக்கான வழி அங்கேதான் இருக்கிறது" என்று சொன்னவர் ஸ்டீபன் ஹாக்கிங். நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்டு இவரது உடல் உறுப்புகள் செயலிழந்துவிட்டன. இருப்பினும் தமது மதிநுட்பத்தால் 'ஈக்வலைஸர்' என்ற கணினி நிரலியின் உதவியோடு கணினிவழியே பேசினார். அனைத்து மக்களுக்கும் புரியும்வகையில் அறிவியலை மிக எளிமையாக விளக்கினார். அண்டவியல் (Cosmology) குறித்த இவரது கண்டுபிடிப்புகள் குறிப்பிடத்தக்கவை.



ஸ்டீபன் ஹாக்கிங்
(1942-2018)

## கருத்து விளக்கப்படம்

**அறிவிப்பைப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**



கல்வி வளர்ச்சி நாளை முன்னிட்டு

தமிழ் இலக்கியக் கழகம் நடத்தும்



பள்ளி மாணவர்களுக்கான

# வினாடி வினாப் போட்டி

இடம் : அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை

தேதி : ஜூலை 15, 2022, வெள்ளிக்கிழமை

**போட்டிப் பிரிவுகள்**

| | |
|---|---|
| பிரிவு -1 | 6, 7, 8ஆம் வகுப்பு மாணவர்கள் |
| பிரிவு -2 | 9, 10ஆம் வகுப்பு மாணவர்கள் |
| பிரிவு -3 | 11, 12ஆம் வகுப்பு மாணவர்கள் |

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்

போட்டியில் பங்குபெறும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

## வினாக்கள்

1. வினாடிவினாப் போட்டியை நடத்தும் கழகம் எது?
2. வினாடிவினாப் போட்டி நடைபெறும் இடம் எது?
3. வினாடிவினாப் போட்டியில் மொத்தம் எத்தனை பரிசுகள் வழங்கப்படுகின்றன?
4. எந்த மாதத்தில் வினாடிவினா போட்டி நடைபெறுகிறது?
5. வினாடிவினாப் போட்டி யாருக்காக நடத்தப்படுகிறது?

## 10.6 கேட்டல் கருத்தறிதல்

### இளம் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா



பிரக்ஞானந்தா

இந்தியாவின் இளம் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா. இவர் தம்முடைய 5ஆவது வயதிலேயே சதுரங்கம் விளையாடத் தொடங்கினார். தமது 12ஆவது வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்றார். இதன் மூலம் உலகளவில் இளம் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்ற 5ஆவது வீரர் என்ற சாதனையையும் படைத்தார் பிரக்ஞானந்தா. இவர், சதுரங்கப்போட்டியில் நார்வே நாட்டைச் சேர்ந்த உலக சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்திச் சாதனை படைத்தார். உலகின் முதல்நிலை வீரரை வீழ்த்திய முதல் இந்திய இளம்வீரர் என்கிற பெருமையைப் பெற்றார். பிரக்ஞானந்தாவின் சகோதரி வைஷாலி. இவரும் சதுரங்க வீரர் ஆவார்

### வினாக்கள்

1. இந்தியாவின் இளம் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றவர் யார்?
2. உலக சாம்பியனான மேக்னஸ் கார்ல்சன் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
3. பிரக்ஞானந்தாவின் சகோதரியின் பெயர் என்ன?
4. பிரக்ஞானந்தா எந்த வயதில் இளம் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றார்?
5. கிராண்ட் மாஸ்டர் பட்டம் மூலம் பிரக்ஞானந்தா செய்த சாதனை என்ன?

## 10.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்





## 10.8 செந்தமிழ்ச்செல்வம்

### மூதுரை

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே- அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்

(பாடல்-2)

-ஔவையார்

(உபகாரம் – உதவி; ஈரமிலா – இரக்கம் இல்லா; ஈந்த – செய்த; நேர் – ஒப்பு/சமம்)

**பொருள்:**

நல்லவர்க்குச் செய்யும் உதவி, கல்லில் செதுக்கிய எழுத்தைப் போன்றது. அஃது எப்போதும் நிலைத்திருக்கும். இரக்கம் இல்லாதவர்க்குச் செய்யும் உதவி, நீரின்மேல் எழுதப்பட்ட எழுத்தைப் போன்றது. அது எழுதும்போதே அழிந்துவிடும்.

## 10.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வீடு | - | House |
| 2. | ஓடு | - | Run |
| 3. | இடம் | - | Place |
| 4. | பொருள் | - | Thing |
| 5. | காலம் | - | Time |
| 6. | நன்றி | - | Thanks |
| 7. | வித்தை | - | Gimmick |
| 8. | வாய்ப்பு | - | Chance |
| 9. | கொடிய விலங்கு | - | Deadly Animal |
| 10. | மறதி | - | Forgetfulness |

## 10.10 செயல்திட்டம்

புதுப்புது உருவங்களைச் செய்து அவற்றின் பெயர்களை எழுதி வருக.

11.1 பேசுவோம்

பாடம் 11



## கலந்துரையாடுவோம்

நீங்கள் அறிந்துள்ள கைத்தொழில்கள் பற்றி வகுப்பு மாணவர்களோடு கலந்துரையாடுக.

## 11.2 படிப்போம்

### தொழில்கள்

இவர் உழவர். உழவுத்தொழில் செய்கிறார்.



இவர் குயவர். களிமண்ணைக் குழைத்துப் பானைகள் வனைகிறார்.



இவர் நெசவாளர். தறியில் ஆடை நெய்கிறார்.



இவர் தச்சர். அழகிய வேலைப்பாடு மிகுந்த கதவை உருவாக்குகிறார்.



இவர் மீனவர். மீன்பிடி தொழில் செய்கிறார்.



இவர் ஓவியர். மெல்லிய தூரிகை கொண்டு வண்ண ஓவியம் தீட்டுகிறார்.



இவர் கைவினைக் கலைஞர். அழகிய பொம்மைகளை உருவாக்குகிறார்.



இவர் சிற்பி. சிலைகளைச் செதுக்குகிறார்.



## பொருள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பரம்பரை | – | வழிவழியாக வருவது |
| 2. | தறி | – | ஆடை நெய்ய உதவும் கருவி |
| 3. | தூரிகை | – | மெல்லிய இழைகளால் ஆன எழுதுகோல் |
| 4. | தீட்டுதல் | – | வரைதல் |
| 5. | கைவினைப்பொருள் | – | கைகளால் உருவாக்கப்படும் அழகிய பொருள்கள் |

## வினாக்கள்

1. குயவர், எதனைக்கொண்டு பானைகள் வனைகிறார்?
2. ஆடை நெய்பவரை எவ்வாறு அழைக்கிறோம்?
3. அழகிய பொம்மைகளை உருவாக்குபவர் யார்?
4. மீனவர் செய்யும் தொழில் யாது?
5. உங்களுக்குப் பிடித்த ஒரு தொழிலின் பெயரைக் கூறுக.

## 11.3 பாடிமகிழ்வோம்

### கைத்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ

– நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்



## 11.4 தெரிந்துகொள்வோம்

### பெயரடை

பெயர்ச்சொல்லின் பண்பை உணர்த்துவது, பெயரடை



ஆழமான கிணறு



நீளமான ஆறு



உயரமான மரம்



பெரிய வீடு



அழகிய பறவை



சின்னப் பையன்

# வினையடை

**வினைச் சொல்லின் பண்பை உணர்த்துவது, வினையடை**



கண்ணன் வேகமாக நீந்தினான்



கவின் நன்றாகப் படித்தான்



தாத்தா தள்ளாடி நடந்தார்



மணி வீட்டைப் புதுமையாகக் கட்டினான்



வானம்பாடி இனிமையாகப் பாடியது



வளவன் மெதுவாக நடந்தான்

## பயிற்சிகள்

### (அ) வண்ணமிடப்பட்ட சொல் பெயரடையா? வினையடையா? எடுத்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | பழைமையான கட்டடம் | (பெயரடை/வினையடை) | பெயரடை |
| 2. | உயரமான மரம் | (பெயரடை/வினையடை) | ________ |
| 3. | மெல்லச் சிரித்தான் | (பெயரடை/வினையடை) | ________ |
| 4. | நன்றாகப் பாடினான் | (பெயரடை/வினையடை) | ________ |
| 5. | பெரிய நாடு | (பெயரடை/வினையடை) | ________ |
| 6. | அழகிய வீணை | (பெயரடை/வினையடை) | ________ |

### (ஆ) பொருத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெண்மையான | - | இருந்தது |
| 2. | விரைவாக | - | வயல் |
| 3. | பசுமையான | - | சாலை |
| 4. | அகலமான | - | ஓடினாள் |
| 5. | சுவையாக | - | முயல் |

## தகவல் துளி

முத்துக்குளித்தல் (Pearl hunting) என்பது, கடலின் ஆழமான பகுதிகளிலுள்ள சிப்பிகளை எடுத்து வருவதாகும். முத்துக்குளித்தலை முத்தெடுத்தல் அல்லது முத்து வேட்டை என்றும் கூறுவர். தமிழர்கள் பழங்காலத்திலிருந்தே முத்துக்குளித்தலை ஒரு தொழிலாகச் செய்து வருகின்றனர். தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் முத்து அதிகமாக எடுக்கப்படுகிறது.



முத்துக்குளித்தல்

## 11.5 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் வினாக்களை படித்து அதற்கான விடையைக் கண்டறிந்து படத்துடன் பொருத்தவும்.**



1. **'நாய்'** - முதலெழுத்தை மாற்றினால் படுத்து உறங்கலாம்
   பாய்



2. **'புலி'** - இறுதி எழுத்தை மாற்றினால் குழம்பு வைக்கலாம்
   ____________



3. **'யானை'** - முதலெழுத்தை மாற்றினால் எலியைப் பிடிக்கும்
   ____________



4. **'வளி'** - முதலெழுத்தை நெடிலாக மாற்றினால் தண்ணீர் பிடிக்கலாம்
   ____________



5. **'அன்பு'** - நடுவிலுள்ள எழுத்தை மாற்றினால் வில்லிலிருந்து புறப்படும்
   ____________

6. **'ஆண்டு'** – நடுவிலுள்ள எழுத்தை நீக்கினால் ஒரு விலங்கைக் குறிக்கும் ____________________



7. **'வளை'** – கடைசி எழுத்தை மாற்றினால் மீன் பிடிக்கலாம் ____________________





8. **'குருவி'** – முதலெழுத்தை மாற்றினால் அதில் குளிக்கலாம் ____________________



9. **'வானம்'** - முதலெழுத்தைக் குறிலாக மாற்றினால் விலங்குகள் வசிக்கலாம் ____________________

10. **'கடி'** – என்ற சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்தால் காட்டுவிலங்கைக் குறிக்கும் ____________________



## 11.6 கேட்டல் கருத்தறிதல்

### பருத்திப் பெண்டிர்



கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட
நூல் நூற்கும் தக்களிகள்.

சங்ககால மக்கள் 'பருத்தி, பட்டு' நூல்களைக் கொண்டு ஆடைகள் நெய்தனர். பருத்தி நூல் நூற்பதில் அவர்கள் திறமை பெற்றிருந்தனர். நூல் நூற்ற பெண்கள் **'பருத்திப் பெண்டிர்'** என அழைக்கப்பட்டனர். ஆடைகளைத் தைப்பதற்கும் அவர்கள் அறிந்திருந்தனர். **'கலிங்கம்'** என்னும் துணி வகை கலிங்க நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. சங்க காலத்தில் துணிகளின் மூலம் பொருளாதாரமும் உயர்ந்தது. தமிழ் இலக்கியமான 'பொருநராற்றுப்படை' என்னும் நூல் பட்டாடையின் மேன்மை பற்றிக் கூறியுள்ளது.

### வினாக்கள்

1. சங்க கால மக்கள் எந்தெந்த நூல்களால் ஆடைகள் நெய்தனர்?
2. நூல் நூற்ற பெண்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
3. பட்டாடையின் மேன்மை பற்றிக் கூறும் நூல் எது?
4. கலிங்க நாட்டிலிருந்து எது இறக்குமதி செய்யப்பட்டது?
5. பருத்தி நூல் நூற்பதில் திறமை பெற்றிருந்தவர்கள் யார்?

## 11.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்





## 11.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(குறள் - 972)

-திருவள்ளுவர்

**பொருள்:**

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலால் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

## 11.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழில்கள் | - | Profession |
| 2. | பரம்பரை | - | Lineage |
| 3. | குயவர் | - | Potter |
| 4. | நெசவாளர் | - | Weaver |
| 5. | தச்சர் | - | Carpenter |
| 6. | மீனவர் | - | Fisherman |
| 7. | ஓவியர் | - | Painter |
| 8. | சிற்பி | - | Sculptor |
| 9. | உழவர் | - | Farmer |
| 10. | பானை | - | Pot |
| 11. | பொம்மை | - | Toy |
| 12. | சிலை | - | Statue |

## 11.10 செயல்திட்டம்

உங்களுக்குக் கிடைக்கும் பொருள்களைக்கொண்டு அழகிய பொருள்களைச் செய்து வருக.

பாடம் 12

## 12.1 பேசுவோம்








### கலந்துரையாடுவோம்

வேளாண் பண்ணைகளுக்குச் சென்று வந்த அனுபவத்தைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

## 12.2 படிப்போம்



# வேளாண்மை

தொழில்களுள் முதன்மையானது உழவு. உலக மக்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களை விளைவிப்பதால் உழவுத்தொழிலே சிறந்தது. 'உழவுத்தொழில் செய்யும் உழவன், உலகம் என்னும் தேருக்கு அச்சாணி' என்று திருவள்ளுவர் போற்றுகிறார். உழவுத்தொழிலுக்குக் கால்நடைகள் உதவுகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியால், தற்போது இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியா, அமெரிக்கா, பிரேசில், இந்தோனேஷியா, சீனா போன்ற நாடுகள் உழவுத்தொழிலில் சிறந்துள்ளன. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உழவுத்தொழிலும் உதவுகிறது.

## பொருள் அறிவோம்

1. உழவுத்தொழில் – பயிர்த்தொழில்
2. உழவர் – பயிர்த்தொழில் செய்பவர்
3. அச்சாணி – முதன்மையான கருவி; கடையாணி
4. கால்நடைகள் – ஆடு, மாடு முதலிய விலங்குகள்
5. இயந்திரங்கள் – கருவிகள்

## வினாக்கள்

1. தொழில்களுள் முதன்மையான தொழில் எது?
2. உழவுத்தொழிலை ஏன் சிறந்ததாகக் கூறுகிறோம்?
3. 'உலகம் என்னும் தேருக்கு அச்சாணி' என யார், யாரைக் கூறுகிறார்?
4. உழவுத்தொழிலில் சிறந்துள்ள நாடுகள் எவை?
5. உழவுத்தொழில் செய்வதற்கு எவையெல்லாம் பயன்படுகின்றன?

## 12.3 பாடிமகிழ்வோம்

### மின்னி மின்னி வானத்தில்

மின்னும் மின்மினி போலவே
மின்னி மின்னி வானத்தில்
என்னை உற்றுப் பார்த்திடும்
சின்னச் சின்ன மீன்களே

என்ன அங்கே செய்கின்றீர்?
எப்படித் தான் நிற்கிறீர்?
அன்னை கழுத்தில் அணிந்திடும்
அழகு வைர மாலையில்

மின்னும் மணிகள் போலவும்
வெள்ளை முத்தைப் போலவும்
பொன்னுப் பூவைப் போலவும்
மின்னிச் சிரிக்கும் மீன்களே

எட்ட நின்று பார்க்கிறீர்
இரவில் மேலே வருகிறீர்
பட்டப் பகலில் எங்குதான்
பறந்து செல்வீர் கூறுங்கள்

–பெ. தூரன்

## 12.4 தெரிந்துகொள்வோம்

### ல, ழ, ள ஒலிவேறுபாடு



சிலம்பம் ஒரு கலை.



வயலில் களை பறித்தார்.



கூடைகள் செய்யக் கழை பயன்படுகிறது.



கடல் அலையில் விளையாடினான்.



பாம்பு அளையிலிருந்து வெளியே வந்தது.



அம்மா குழந்தையை அழைத்தார்.



எனக்கு முழங்காலில் வலி.



வளியால் மரங்கள் அசைந்தன.



இது நான் போகும் வழி.



கிளிக்குக் கூர்மையான அலகு உண்டு.



அளகு அடைகாக்கிறது.



வானுக்கு நிலவு அழகு.

## பொருள் அறிவோம்

1. களை - தேவையற்ற செடிகள்
2. கழை - மூங்கில்
3. அளை - புற்று
4. அழை - கூப்பிடுதல்
5. வளி - காற்று
6. வழி - பாதை
7. அலகு - பறவையின் மூக்கு
8. அளகு - கோழி

## பயிற்சி

**பொருத்தமான எழுத்தை எடுத்து எழுதுக.**



அ ________

| | | |
|---|---|---|
| லை | ளை | ழை |



க ________

| | | |
|---|---|---|
| லை | ளை | ழை |



வ ________

| | | |
|---|---|---|
| லி | ளி | ழி |



அ________கு

| | | |
|---|---|---|
| ல | ள | ழ |



அ ________

| | | |
|---|---|---|
| லை | ளை | ழை |

## 12.5 மொழியோடு விளையாடுவோம்

நடுவில் உள்ள எழுத்தை முதலாகக் கொண்டு சொற்களை உருவாக்குக.




1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________
7. ____________________
8. ____________________
9. ____________________
10. ____________________

### தகவல் துளி

'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்று அழைக்கப்பட்டவர் சர்தார் வல்லபாய் பட்டேல். அவர், ஒருமுறை வெளிநாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு, ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது, கூட்டத்திலிருந்த ஒருவர் "உங்கள் கல்ச்சர் (Culture) என்ன?" என்று அவரிடம் கேட்டார். அதற்கு, பட்டேல் "எங்கள் கல்ச்சர் அக்ரிகல்ச்சர் (Agriculture)" என்று உடனே பதிலளித்தார். இதிலிருந்து, இந்தியர்கள் வேளாண்மைக்குக் கொடுத்துவரும் முதன்மையை அறியமுடிகிறது.


சர்தார் வல்லபாய் பட்டேல்
(1875-1950)

## 12.6 கேட்டல் கருத்தறிதல்

### பாரி வள்ளல்



குறுநில மன்னர்களுள் ஒருவர் பாரி. இவர், பறம்பு மலையை ஆட்சி செய்தார். இம்மலை முந்நூறு ஊர்களைக் கொண்டது. இது, பிறம்பு மலை என்றாகி இப்பொழுது 'பிரான்மலை' என்று அழைக்கப்படுகிறது. பாரி பெரும்புகழ் பெறக்காரணம், அவரது கொடைத்தன்மையே. தம்மை நாடி வருபவருக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுத்தார்.

ஒருநாள், பாரி தம் தேரில் மலைப்பாதை வழியாகச் சென்றார். அங்கு முல்லைக்கொடி ஒன்றைக் கண்டார். அந்தக் கொடி படர்வதற்குக் கொம்பின்றி அசைந்தது. அவர், முல்லைக் கொடிக்காக மனம் இரங்கினார். உடனே அந்தக் கொடியைத் தம் தேரில் படருமாறு செய்தார். மனிதருக்கு மட்டுமன்றி அஃறிணைப் பொருள்களுக்கும் உதவினார். இதிலிருந்து, பாரியின் வள்ளல் தன்மையை அறியலாம்.

## வினாக்கள்

1. பறம்பு மலையை ஆண்ட மன்னர் யார்?
2. பறம்பு மலையில் எத்தனை ஊர்கள் இருந்தன?
3. பாரி எதற்காக மனம் இரங்கினார்?
4. பறம்பு மலையின் தற்போதைய பெயர் என்ன?
5. பாரி பெரும்புகழ் பெறக் காரணம் என்ன?

## 12.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்




## 12.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்

(குறள்- 200)

-திருவள்ளுவர்

**பொருள்:**

நாம் பயன்தரக்கூடிய சொற்களையே பேசவேண்டும். பயன்தராத வீண் சொற்களைப் பேசவேண்டாம்.

## 12.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | இயந்திரம் | - | Machine |
| 2. | தேர் | - | Chariot |
| 3. | கால்நடைகள் | - | Livestock |
| 4. | பயிர்கள் | - | Crops |
| 5. | பொருளாதாரம் | - | Economy |
| 6. | வேளாண்மை | - | Agriculture |
| 7. | மக்கள் | - | People |
| 8. | உழவன் | - | Farmer |
| 9. | போற்று | - | Praise |
| 10. | உதவு | - | Help |
| 11. | பயன்படுத்து | - | Use |
| 12. | தொழில்நுட்பம் | - | Technology |
| 13. | நாடுகள் | - | Countries |
| 14. | வளர்ச்சி | - | Development |
| 15. | முதல் பரிசு | - | First price |

## 12.10 செயல்திட்டம்

உங்கள் பகுதியில் கிடைக்கும் எவையேனும் ஐந்து தாவரங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்கி வருக.

பாடம் 13

## 13.1 பேசுவோம்



உடல் ஓவியம்



நீர் ஓவியம்



கண்ணாடி ஓவியம்



துணி ஓவியம்

## கலந்துரையாடுவோம்

பல்வேறு முறைகளில் வரையப்படும் ஓவியங்கள் குறித்துக் கலந்துரையாடுக.

## 13.2 படிப்போம்

# சித்தன்னவாசல்



நாள் - 05.03.2023
21, ஸ்மைலி என்கிளேவ்,
அப்போலோ அவென்யு,
இங்கிலாந்து.

அன்புள்ள செல்வி,

நான் நலமாக உள்ளேன். நீயும் நலமாக இருப்பாய் என நினைக்கிறேன். இரு வாரத்திற்கு முன்பு நானும் என் குடும்பத்தினரும் தமிழ்நாட்டிற்குச் சென்றோம். அங்கு, சித்தன்னவாசல் என்னும் இடத்தைப் பார்த்தோம். அந்த இடம், குகை ஓவியங்களுக்குப் புகழ்பெற்றது. அதன் சிறப்பைப் பற்றி உன்னிடம் கூற விரும்புகிறேன். அங்கு அழகான நுழைவாயிலைக் கண்டேன். அதன்வழியே சென்றேன். ஓர் இடத்தில் செதுக்கப்பட்ட பாதை இருந்தது. அதன்மீது ஏறினேன். அங்கே பாறையைக் குடைந்து செய்த குகைபோன்ற அமைப்பு இருந்தது. அதுதான் குடைவரைக் கோவில் என்று என் பெற்றோர் கூறினர். குகையின் மேல்பகுதியில் ஓவியம் ஒன்று வரையப்பட்டிருந்தது. அதில் குளம், தாமரை மலர்கள், தாமரை மொட்டுகள் முதலான காட்சிகள் இருந்தன. அந்தக் குளத்தில் ஆண்கள், பெண்கள், அன்னங்கள், மீன்கள் நீந்தி விளையாடும் காட்சிகளும் இருந்தன.






இடப்பக்கத் தூணில் நடனப் பெண்ணின் ஓவியம் ஒன்றும் இருந்தது. இந்த ஓவியங்களிலுள்ள வண்ணங்கள் மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டவை. இவற்றை நான் கண்டு மகிழ்ந்ததைப் போல நீயும் காண விரும்புவாய் என எண்ணுகிறேன். உன் கடிதத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

அன்புடன்,

கலை.

உறைமேல் முகவரி

**செல்வி,**

25/4561 கேம்ப் தெரு,

டர்கம் நகர், டொரண்டோ,

கனடா.

## பொருள் அறிவோம்

1. குகை ஓவியங்கள் - பாறையைக் குடைந்து வரையப்படும் ஓவியங்கள்
2. புகழ்பெற்றது - சிறப்புடையது

## பயிற்சிகள்

### (அ) கோடிட்ட இடத்தில் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(குகை ஓவியங்கள், தாமரை மலர்கள், சித்தன்னவாசல்)

1. கலை கண்டு மகிழ்ந்த இடம் ______________________________.
2. சித்தன்னவாசலில் ______________________________ உள்ளன.
3. குகையின் மேல்பகுதியில் காணப்பட்ட ஓவியத்தில்______________________________ இருந்தன.

## 13.3 பாடிமகிழ்வோம்

### மிக அழகு

அன்னம் போல மிதந்து அசைந்தே
ஆற்றில் செல்லும் படகினும்
மின்னும் வானம் தனில் மிதக்கும்
மேகக் கூட்டம் மிக அழகாம்

ஆற்றைக் கடக்க இருகரையை
அணைத்தே எழுப்பும் பாலத்தினும்
காற்றில் கரையா வானவில்
காணக் காண மிக அழகாம்

– வயலூர் சண்முகம்



## 13.4 தெரிந்துகொள்வோம்

### வினாச்சொற்கள்

ஒன்றைப் பற்றி அறிந்துகொள்ள, கேட்கப்படுவது "கேள்வி" அல்லது "வினா" எனப்படும்.

| | |
|---|---|
| யார் | உங்கள் நண்பன் யார்? |
| என்ன | மேசையில் இருப்பது என்ன? |
| எது | உங்கள் தங்கைக்குப் பிடித்த பழம் எது? |
| எந்த | உங்கள் வீட்டிற்குச் செல்ல எந்தப் பேருந்தில் ஏற வேண்டும்? |
| எங்கே | விடுமுறைக்கு எங்கே செல்வாய்? |
| எப்படி | ஊருக்கு எப்படிச் செல்வாய்? |
| ஏன் | நேற்று நீங்கள் ஏன் பள்ளிக்கு வரவில்லை? |
| எப்பொழுது | நீங்கள் எப்பொழுது விளையாடச் செல்வீர்கள்? |
| எத்தனை | உங்களுக்கு எத்தனை புத்தகங்கள் வேண்டும்? |
| எவ்வளவு | உங்கள் வீட்டிற்கும் பள்ளிக்கும் எவ்வளவு தூரம்? |
| எவ்வாறு | உங்கள் நண்பரை எவ்வாறு தேர்ந்தெடுப்பீர்கள்? |

## பயிற்சிகள்

### (அ) சரியான வினாச்சொல்லைத் தெரிவு செய்க.

1. திருக்குறளை இயற்றியவர் ____________________?

   அ. என்ன  ஆ. எங்கே  இ. யார்

2. உங்களுக்குப் பிடித்த இடம் ____________________?

   அ. எங்கே  ஆ. எப்பொழுது  இ. எது

3. நேற்று உங்கள் நண்பனுடன் ____________________ சென்றாய்?

   அ. எத்தனை  ஆ. எங்கே  இ. எவ்வளவு

4. உங்களுக்கு ____________________ பெட்டிகள் தேவை?

   அ. எப்படி  ஆ. எங்கே  இ. எத்தனை

5. உங்கள் அம்மாவின் பிறந்த நாள் ____________________?

   அ. எப்பொழுது  ஆ. எங்கே  இ. என்ன

### (ஆ) சரியான சொற்களைத் தெரிவு செய்து, வினாத் தொடரை நிரப்புக.

என்ன, எப்பொழுது, எவ்வளவு, யார், எத்தனை, எங்கே

1.  நட்டது ____________________?

2. ____________________  உள்ளன?

3.  ____________________ உள்ளது?

4.  ____________________ கொண்டாடப்படுகிறது?

5. 

____________________ வேண்டும்?

## 13.5 மொழியோடு விளையாடுவோம்

**கட்டத்தில் கொடுக்கப்பட்ட சொல்லை முதலாகக் கொண்டு சொற்களை உருவாக்குக.**

தங்கம் → காசு
→
→
→
→

1. தங்கக்காசு
2. ______________
3. ______________
4. ______________
5. ______________

## தகவல் துளி

பிரிட்டனைச் சேர்ந்தவர் ஜான் ஸ்மித். அவர், ஒருமுறை வேட்டைக்குச் சென்றிருந்தார். அவர் துரத்திச் சென்ற விலங்கு ஒரு புதரில் மறைந்தது. அந்தப் புதருக்கு அருகில் சென்று பார்த்தபோது குகை ஒன்று தெரிந்தது. அந்தக் குகைக்குள் சென்ற அவர் பெரும்வியப்புக்கு ஆளானார். அங்கிருந்த குகை ஓவியங்களை அவர் இதுவரை எங்குமே கண்டதில்லை. அந்த ஓவியங்களில் அடர்ந்த ஆரஞ்சு, நீலம், பச்சை போன்ற நிறங்கள் காணப்பட்டன. காலம் கடந்தும் அந்த ஓவியங்களிலுள்ள நிறங்கள் அழியாமல் இருப்பதைக் கண்டார், இதற்குக் காரணம், ஓவியக் கலைஞர்களின் கலைநுட்பமே என்பதை உணர்ந்தார். அவரை வியப்படையச் செய்த அந்த ஓவியங்களே அஜந்தா குகை ஓவியங்கள். அவை இந்தியாவிலுள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைந்துள்ளன.



அஜந்தா குகை

## கருத்து விளக்கப்படம்




## வினாக்கள்

1. அகழாய்வு எங்கு நடக்கிறது?
2. கீழடி வெள்ளிக்காசு எந்தக் காலத்திற்கு முந்தையது?
3. விளம்பரத்தில் எந்த நூற்றாண்டு குறிப்பிடப்பட்டுள்ளது?
4. வெள்ளிக்காசுகளில் என்னென்ன குறியீடுகள் இருந்தன?
5. விளம்பரத்தை வெளியிடும் துறை எது?

## 13.6 கேட்டல் கருத்தறிதல்

### நட்பின் சிறப்பு



ஆசிரியர் கரும்பலகையில் மூன்று தாவரங்களின் படங்களை வரைந்தார். இத்தாவரங்களைப் போலவே நம் நண்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். முதலில் வாழை மரம்போல் ஒரு நட்பு. வாழைமரத்திற்குத் தொடர்ந்து நீர் ஊற்றினால்தான் பயன் தரும். இரண்டாவதாக, தென்னை மரம்போல் ஒரு நட்பு. தென்னை மரத்திற்கு நாம் எப்போதாவது நீர் ஊற்றினாலும், பயன் தரும்.

மூன்றாவதாக, பனை மரம்போல் ஒரு நட்பு. பனைமரத்திற்கு நாம் நீர் ஊற்றினாலும் ஊற்றாவிட்டாலும் பயன் தரும். மேலும், பாதுகாத்தாலும் பாதுகாக்காவிட்டாலும் அது நமக்குப் பயன் தரும். எதையும் எதிர்பார்க்காமல் நமக்கு அது உதவும் என்றார் ஆசிரியர். இதைக்கேட்ட மாணவர்கள் நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி நன்கு உணர்ந்தனர்.

## வினாக்கள்

1. நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது?
2. உங்களுடைய தோழன்/தோழி எவ்வாறு இருக்க வேண்டும் என நினைக்கிறீர்கள்?
3. நல்ல நட்பைத் தெரிவு செய்தவரின் வாழ்க்கை எவ்வாறு இருக்கும்?
4. உங்கள் நண்பரைப்பற்றிக் கூறுக.

## 13.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்





## 13.8 செந்தமிழ்ச்செல்வம்

### இனியவை நாற்பது

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது

(பாடல் – 16)

- பூதஞ்சேந்தனார்,

(உரைத்தல் - கூறுதல்; ஈதல் – கொடுத்தல்)

**பொருள்:**

கற்றவர்முன் தாம் கற்றதை எடுத்துரைத்தல் மிகவும் இனியது. தம்மைவிட அறிவில் சிறந்தவருடன் பழகுவது மிகவும் இனியது. எள் அளவு கூடத் தான் பிறரிடம் பொருளுதவி கேட்காமல், பிறர்க்குக் கொடுத்தல் எல்லா வகையிலும் மிகவும் இனியதாகும்.

## 13.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | விடுமுறை | - | Vacation |
| 2. | உறவினர் | - | Relative |
| 3. | தாத்தா | - | Grandfather |
| 4. | கிராமம் | - | Village |
| 5. | குகை | - | Cave |
| 6. | குன்று | - | Hill |
| 7. | நுழைவு வாயில் | - | Entrance |
| 8. | பாதை | - | Path |
| 9. | காட்சி | - | Scene |
| 10. | பாறை | - | Rock |
| 11. | குளம் | - | Pool |
| 12. | கடிதம் | - | Letter |
| 13. | அன்னம் | - | Swan |
| 14. | தூண் | - | Pillar |
| 15. | நடனப்பெண் | - | Dancer |
| 16. | வண்ணங்கள் | - | Colours |
| 17. | மூலிகைகள் | - | Herbs |
| 18. | தொன்மை | - | Antiquity |
| 19. | குடைவரைக் கோவில் | - | Rock cut Temple |
| 20. | தொல்லியல் துறை | - | Department of Archeology |

## 13.10 செயல்திட்டம்

உங்களுக்குப் பிடித்த பொருளையோ / காட்சியையோ ஓவியமாக வரைந்து வருக

பாடம்
# 14

## 14.1 பேசுவோம்

















### கலந்துரையாடுவோம்

நீங்கள் பார்த்த / கேட்டு இரசித்த / இசைத்த இசைக்கருவிகள் குறித்துக் கலந்துரையாடுக.

## 14.2 படிப்போம்

# பறையிசைக் கருவி



ஆல்வினுக்கு நெடுநாளாக இசைக்கருவி அருங்காட்சியகம் செல்ல வேண்டும் என்று ஆசை. இன்று காலை, அவன் அம்மா அங்குப் போகலாம் என்று சொன்னதும் மகிழ்ந்தான். இதற்குமுன் கணினியில் மட்டுமே பார்த்த அந்த இடத்தை, நேரில் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணமே மகிழ்ச்சியைத் தந்தது.

அவர்கள், அருங்காட்சியகத்தின் உள்ளே சென்றார்கள். அங்கு ஏராளமான இசைக்கருவிகள் இருந்தன. கண்கள் வியப்பில் விரிய, ஆல்வின் ஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டே வந்தான். தோல் கருவிகள் இருக்கும் பகுதிக்குச் சென்றான். அங்கிருந்த கருவி ஒன்று அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதை மெல்லத் தட்டினான், அதிலிருந்து ஒலி எழுந்தது. வியப்புடன் மீண்டும் தட்டினான் "யார் நீ?" என்ற குரல் கேட்டது. சற்றே அதிர்ந்து சுற்றிப் பார்த்தான். ஆம், ஒலி அக்கருவியிலிருந்துதான் வந்தது என்பதை உணர்ந்தான். அதனோடு பேசத் தொடங்கினான்.

**ஆல்வின்** : என் பெயர் ஆல்வின். உன் பெயர் என்ன?

**இசைக்கருவி** : என் பெயர் பறை. என்னைத் தப்பு என்றும் கூறுவார்கள். உனக்கு இசைக்கருவிகள் என்றால் பிடிக்குமா?

**ஆல்வின்** : எனக்கு இசையும் பிடிக்கும்; இசைக்கருவிகளும் பிடிக்கும். நீ எந்த நாட்டு இசைக்கருவி?

**பறை** : நான் தமிழ்நாட்டின் இசைக்கருவி.

**ஆல்வின்** : ஆமாம் , உனக்கு ஏன் பறை என்று பெயர் வந்தது?

**பறை** : பறை என்றால் கூறு அல்லது சொல் என்று பொருள். ஒரு செய்தியைத் தெரிவிக்கும்போது என்னை இசைப்பார்கள். எனவே பறை என்ற பெயர் வந்தது.

**ஆல்வின்** : ஓ அப்படியா!? உன்னை எப்படிச் செய்கிறார்கள்?

**பறை** : வேப்பமரப்பலகையை வட்டமான சட்டம்போல் செய்வார்கள். பிறகு, பதப்படுத்தப்பட்ட விலங்கின் தோலை அந்தச் சட்டத்தில் இறுக்கமாகக் கட்டுவார்கள். பின்னர், புளியங்கொட்டைப் பசையைப் பயன்படுத்தி முழுமையாக ஒட்டுவார்கள். நான் தயாராகிவிடுவேன்.

**ஆல்வின்** : எப்படி ஒலி எழுப்புவார்கள்?

**பறை** : மூங்கிலால் செய்யப்பட்ட சிம்புக்குச்சி மற்றும் பூவரசங்குச்சியால் செய்யப்பட்ட அடிகுச்சியால் அடித்து ஒலி எழுப்புவார்கள்.

**ஆல்வின்** : எப்போதெல்லாம் உன்னை இசைப்பார்கள்?

**பறை** : பழங்காலத்தில் விலங்குகளை விரட்டவும் அரசர்களின் ஆணைகளை அறிவிக்கவும் என்னை அடித்து ஒலி எழுப்பினர்கள். இப்போது, விழாக்காலங்களிலும் இறப்பு நிகழ்வுகளிலும் என்னை இசைக்கிறார்கள். ஆகையால், தமிழர்களின் வாழ்வியலோடு நான் எப்போதும் இணைந்து இருக்கிறேன்.

**ஆல்வின்** : உன்னை அடிக்கும்போது மிக அதிகமாகச் சத்தம் வருமா?

**பறை** : ஆமாம். அது மட்டுமா! என்னை முறையாகத் தாளம் தவறாது அடித்தால், அனைவரையும் ஆட வைப்பேன்.

**ஆல்வின்** : உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நானும் உன்னை இசைக்கலாமா?

**பறை** : பறையிசையைக் கற்றுத்தரும் ஆசிரியரிடம் முறையாகக் கற்று இசைக்கலாம்.

(ஆல்வின் பறையைத் தட்ட... டம் டம் டம் என ஒலிக்கிறது.)

## பொருள் அறிவோம்

1. பறை – ஒரு தோல் இசைக்கருவி
2. சிற்றூர் – சிறிய கிராமப்பகுதி
3. தாளம் – ஓசை

## வினாக்கள்

1. நம் மனத்தை மகிழ்விப்பது எது?
2. இசைப்பதற்குப் பயன்படும் கருவிகளின் பெயர்களைக் கூறுக.
3. பறை இசைக்கருவி எதற்குப் பயன்பட்டது?
4. பறை இசைக்கருவி எவ்வாறு செய்யப்படுகிறது?
5. பறை இசையின் சிறப்பு யாது?

## 14.3 பாடிமகிழ்வோம்

### அழகிய தமிழில் எழுதுங்கள்

அழகிய தமிழில் எழுதுங்கள்
அனைவரும் மகிழ்ந்து பழகுங்கள்!
பிழைகளை ஒழிக்க வாருங்கள்
பிள்ளைகள் விரைந்து சேருங்கள்

முயற்சிகள் செய்தால் முடியாதா?
முற்றிலும் நெஞ்சில் படியாதா?
பயிற்சிகள் என்றும் வெற்றி பெறும்
பைந்தமிழ் நாவில் பற்றி வரும்

படிக்கும் காலம் பொற்காலம்
பண்பை வளர்க்கும் நற்காலம்
படித்தோர் பாரில் உயர்ந்தார்கள்
படிக்க வாரீர் தோழர்களே!

-கோ. மோகனரங்கன்



## 14.4 தெரிந்துகொள்வோம்

### இரு சொல், மூன்று சொல் தொடர்கள்

| தொடர்கள் | படம் |
|---|---|
| காவியா படித்தாள்.<br>காவியா ஓலைச்சுவடிகளைப் படித்தாள். |  |
| குதிரை ஓடியது.<br>குதிரை வேகமாக ஓடியது. |  |
| ரீனா ஆடினாள்.<br>ரீனா மேடையில் ஆடினாள். |  |
| சிபி ஏறினான்.<br>சிபி மலை ஏறினான். |  |
| பாரதி நட்டான்.<br>பாரதி மரக்கன்று நட்டான். |  |

## பயிற்சிகள்

### (அ) சொற்களை முறைப்படுத்தித் தொடர்கள் அமைக்க

எ.கா. சென்றாள் கடைக்குச் மதி

மதி கடைக்குச் சென்றாள்.

1. பாதுகாத்தான் மரங்களைப் ஜஸ்வந்த்

______________________________

2. வயலின் வாசித்தாள் ஜோனல்

______________________________

3. இயற்றினார் திருவள்ளுவர் திருக்குறளை

______________________________

4. பெய்தது மழை நேற்று

______________________________

### (ஆ) இருசொல் கொண்ட தொடரமைக்க

எ.கா. அம்மா ______________

அம்மா பாடினார்.

1. குழந்தை ______________
2. மழை ______________
3. யானை ______________
4. பூவைப் ______________

## தகவல் துளி

இசைத்தூண் என்பது, இசை எழுப்பும் வகையில் உருவாக்கப்பட்ட கல்தூணைக் குறிக்கும். இது கோவில் மண்டபங்களின் ஒரு பகுதியாக அமைக்கப்படுகிறது. இசைத்தூண்கள் தமிழ்நாட்டிலும் அயல் மாநிலங்களிலும் காணப்படுகின்றன. இவை தமிழர்களின் நுட்பமான கட்டடக் கலை நுட்பங்களுள் ஒன்று. தமிழ்நாட்டில், மதுரை, திருநெல்வேலி, ஆழ்வார்திருநகரி, கிருஷ்ணாபுரம், செண்பகராம நல்லூர், தென்காசி, திருக்குற்றாலம், சுசீந்திரம் போன்ற இடங்களில் இசைத்தூண்கள் உள்ளன.



இசைத்தூண்

## 14.5 மொழியோடு விளையாடுவோம்

படங்களைப் பார்த்துக் கீழ்க்காணும் கட்டங்களை நிரப்புக





| | | |
|---|---|---|
| | கு | |
| அ | ரு | வி |
| | வி | |





| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |





| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |





| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |





| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

## 14.6 கேட்டல் கருத்தறிதல்

### வள்ளைப் பாட்டு



வள்ளைப் பாட்டு என்பது பெண்களால் பாடப்படும் ஒரு வகைப் பாட்டு. வள்ளை என்பது, உலக்கையைக் குறிக்கும். உரலில் தினையை இடிப்பதற்காக, உலக்கையைப் பயன்படுத்துவர். அப்போது, களைப்பு தெரியாமல் இருப்பதற்காகப் பாடல் பாடிக்கொண்டே செய்வர். இப்பாடலுக்கு உரல் பாட்டு, உலக்கைப் பாட்டு, அம்மானை, வள்ளை, பொற்சுண்ணம், வள்ளைக் கூத்து எனப் பல்வேறு பெயர்கள் உள்ளன. வயலில் விளைந்த நெல்லின் கதிரினை முறித்து, கரிய நிறமுடைய உலக்கையால் பச்சை அவல் இடித்துள்ளனர் எனச் சங்க இலக்கிய நூலான அகநானூறு குறிப்பிடுகிறது.

## வினாக்கள்

1. வள்ளை என்பதன் பொருள் யாது?
2. தினையை இடிக்கும் பெண்கள், களைப்பு தெரியாமல் இருக்க என்ன பாட்டு பாடுவார்கள்?
3. வள்ளைப் பாட்டைப் பாடுபவர்கள் யார்?
4. வள்ளைப் பாட்டைக் குறிக்கும் வேறு பெயர்களைக் கூறுக.
5. வள்ளைப் பாட்டு பற்றிய செய்தியைக் குறிப்பிடும் நூல் எது?

## 14.7 படம் பார்த்துக் கதை கூறுவோம்



## 14.8 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

(குறள் - 504)

-திருவள்ளுவர்

(குணம் - பண்பு; நாடி - ஆராய்ந்து; மிகை - மிகுதியான)

**பொருள்:**

ஒருவனுடைய குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து, அவற்றுள் எது மிகுதியாக இருக்கிறதோ அதைக்கொண்டே அவன் எப்படிப்பட்டவன் என மதிப்பிட வேண்டும்.

## 14.9 அறிந்துகொள்வோம்

1. இசை - Music
2. புல்லாங்குழல் - Flute
3. மிருதங்கம் - Percussion instrument
4. பறை - Drum
5. சங்கு - Conch
6. தாளம் - Rhythm
7. கொம்பு - Horn
8. குழந்தைகள் - Children
9. பெரியவர்கள் - Elders
10. இசைக்கருவிகள் - Musical instruments

## 14.10 செயல்திட்டம்

பறை இசைக்கருவியின் மாதிரி ஒன்றைச் செய்க.

# மீள்பார்வை

## பயிற்சிகள்

**1. பின்வருவனவற்றுள் உயர்திணையைக் குறிக்கும் படங்களின் பெயர்களைக் கூறுக.**














**2. பின்வரும் அஃறிணைச் சொற்களைப் படித்துக் காட்டுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| புத்தகம் | ஆடு | பறவை | கப்பல் | மயில் |
| பொம்மை | மரங்கள் | செடிகள் | முயல் | விலங்குகள் |

**3. பின்வரும் சொற்களில் ஆண்பால் சொற்களை வட்டமிடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| அண்ணன் | சுதா | அப்பா | செல்வா | கவிதா |
| ராணி | சிவா | செல்வி | ராமன் | கயல் |

**4. பின்வருவனவற்றுள் பெண்பால் சொற்களை எடுத்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனந்தி | தாத்தா | வாணி | தருண் | கயல்விழி |
| கதிர் | மாதவி | மாணவன் | மாணவி | கண்ணன் |

1.__________ 2.__________ 3.__________ 4.__________ 5.__________

## 5. பின்வரும் தொடர்களிலுள்ள இடைச்சொற்களை எடுத்து எழுதுக.

1. அணில் மரத்தின் மேல் ஏறியது.
2. வீட்டிற்கு வெளியில் மரம் உள்ளது.
3. கவினுக்குப் பின்னால் பூனை உள்ளது.
4. அப்பா வீட்டிலிருந்து சென்றார்.
5. செடியில் பூக்கள் பூத்திருந்தன.

## 6. பின்வரும் சொற்களில் ஒருமைச் சொற்களை வட்டமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| பூக்கள் | பந்து | மீன் | வீடுகள் | மான் |
| மரம் | நாற்காலி | புறாக்கள் | பழங்கள் | ஆடுகள் |

## 7. பின்வரும் சொற்களில் பன்மைச் சொற்களை வட்டமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| சிங்கம் | நிலங்கள் | குதிரை | தேனீக்கள் | நண்டு |
| காடுகள் | வானம் | மாடுகள் | மேசை | குயில்கள் |

## 8. வண்ணமிட்ட சொல்லுக்கு ஏற்ப, ஒருமை அல்லது பன்மைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.

1. கூட்டில் குயில் இருந்தது. மரக்கிளையில் ____________ இருந்தன.
2. கண்ணன் ____________ வாங்கினான். மேசையின்மீது புத்தகங்கள் இருந்தன.
3. காற்றில் இலைகள் அசைந்தன. காய்ந்த ____________ மரத்திலிருந்து உதிர்ந்தது.
4. சிங்கம் தண்ணீர் குடித்தது. ____________ தண்ணீர் குடித்தன.
5. தெருவில் ____________ வரிசையாக இருந்தன. என் வீடு அருகில் உள்ளது.

## 9. கீழ்க்காணும் எண்ணுப்பெயர்களைப் படித்துக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | இரண்டு | ஐந்து | ஏழு | ஒன்பது |
| இருபது | நாற்பது | அறுபது | எண்பது | நூறு |

## 10. எண்களோடு எண்ணுப்பெயர்களைப் பொருத்துக.

1. 50 - எட்டு
2. 80 - பத்து
3. 8 - முப்பது
4. 10 - ஐம்பது
5. 30 - எண்பது

## 11. கீழேயுள்ள ஆடை, அணிகலன் சொற்களைப் படித்துக் காட்டுக.

வளையல், மெட்டி, மோதிரம், வேட்டி, பாவாடை, சட்டை, பட்டுப் புடவை, நெற்றிச்சுட்டி, ஒட்டியாணம், கொலுசு, முத்துமாலை, துண்டு, தோடு

## 12. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. Teacher -
2. Sea -
3. Forest -
4. Palm leaf -
5. Mountains -
6. Drama -
7. Education -
8. Sword -
9. Bangle -
10. River bank -

## 13. பின்வரும் சொற்களில் விடுபட்ட (ண, ந, ன) எழுத்துகளை எழுதுக.

1) அன் ____ ம் 2) வ ____ க்கம் 3) கு ____ ம் 4) ____ த்தை 5) ப ____ ம்

## 14. கீழ்க்காணும் மரபுத்தொடர்களைச் சரியான பொருளுடன் பொருத்துக.

1. திக்குமுக்காடி - புகழோடு விளங்குதல்
2. ஆழம் பார்த்தல் - உதவி செய்தல்
3. முதலைக்கண்ணீர் - அறிவுத்திறமையை அளவிடுதல்
4. கை கொடுத்தல் - திணறுதல்
5. கொடிகட்டிப் பறத்தல் - பொய்யான அழுகை

**15. கோடிட்ட இடத்தில் பொருத்தமான இணைமொழிகளை எடுத்து எழுதுக.**

**(அல்லும்பகலும், மூலைமுடுக்கு, இன்பதுன்பம், உற்றார்உறவினர், அரைகுறையாகப்)**

1. அவன் ____________ படித்தான்.
2. தந்தை ____________ உழைத்தார்.
3. அக்காவின் திருமணம் ____________ சூழ நடைபெற்றது.
4. வீட்டின் ____________ எல்லாம் தேடியும் என் பேனா கிடைக்கவில்லை.
5. மனித வாழ்வு ____________ நிறைந்தது.

**16. கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(தின்பண்டம், சிப்பிகள். பூச்செடிகள், உண்டோம், கடற்கரைக்கு, மகிழ்ந்தோம்)**

பெற்றோர் எங்களைக் ____________ அழைத்துச் சென்றனர். அங்கு மணலில் ____________ இருந்தன. அவற்றை எடுத்து நானும் தம்பியும் விளையாடினோம். அம்மா ____________ கொண்டு வந்திருந்தார். நாங்கள் அனைவரும் அதனை ____________. பின்னர், அருகிலிருந்த பூங்காவிற்குச் சென்றோம். அங்கு அழகிய ____________ இருந்தன. அவற்றைக் கண்டு ____________.

**17. பின்வரும் பாடலைப் பாடிக்காட்டுக.**

தமிழுக்கு அமுதென்று பேர் – அந்தத்

தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

தமிழுக்கும் நிலவென்று பேர் – இன்பத்

தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்

தமிழுக்கு மணமென்று பேர் – இன்பத்

தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்

தமிழுக்கு மதுவென்று பேர் – இன்பத்

தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்

-பாரதிதாசன்

18. படத்தைப் பார்த்து, என்ன தொழில் செய்கிறார்கள் எனக் கூறுக.











19. பின்வரும் படங்களை வரிசைப்படுத்திக் கதை கூறுக.









20. பின்வரும் படத்தைப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடை கூறுக.




1. அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ள விழாவின் பெயர் என்ன?
2. விழாவை நடத்தும் துறை எது?
3. விழா எங்கு நடக்கிறது?
4. விழா எப்பொழுது நடக்கிறது?
5. இந்நிகழ்வு எந்தெந்தக் கலைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது?

## அடிப்படை மொழித்திறன்கள்
## பாடங்கள் – 14 பாடங்கள், இலக்கணம், மொழிப் பயிற்சிகள்

### கேட்டல்

- புதிய சொற்களைக் கேட்டுப் பொருள் உணர்தல்.
- சிறுசிறு தொடர்களைக் கேட்டறிதல்.
- எளிய பாடல்களைக் கேட்டு மகிழ்தல்.
- ஒலி வேறுபாடுடைய சொற்களைக் கேட்டுப் பொருள் அறிதல். (ண,ந,ன/ர,ற/ ல,ழ,ள)
- உரைப்பகுதியைக் கேட்டுப் பொருளுணர்தல்.
- அறக்கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.
- இலக்கணக் கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல். (இடைச்சொற்கள், திணை, பால், எண், பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடை)

### பேசுதல்

- படக்காட்சிகள், சூழல்களைப் புரிந்துகொண்டு பேசுதல்.
- சிறுசிறு தலைப்புகளில் கருத்தாடல் செய்தல்.
- குறிப்பிட்ட தலைப்பில் செய்திகளைத் திரட்டிக் குழுவில் கலந்துரையாடுதல்.
- தாம் கேட்ட புதிய சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகள் முதலியவற்றின் பொருளுணர வினாக்கள் எழுப்பி விடை காணல்.
- எளிய இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு பேசுதல். (இடைச்சொற்கள், திணை, பால், எண், போன்றவை)
- ஒலிவேறுபாடுடைய சொற்களின் பொருள் அறிந்து, சரியாக ஒலித்துப் பழகுதல்.
- மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாகப் பேசுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள், வினாச்சொற்கள் போன்றவை)
- படக்கதைகளைப் புரிந்துகொண்டு, கோவையாகப் பேசுதல்.

### படித்தல்

- சிறுசிறு தொடர்களைப் படித்துப் புரிந்துகொள்ளுதல்.
- எளிய உரைப்பகுதிகளைப் படித்துக் கருத்துணர்தல்.
- புதிய சொற்களைப் படித்துப் பொருள் அறிதல்.
- குரல் ஏற்றஇறக்கம், ஒலிப்புமுறை அறிந்து தெளிவாகப் படித்தல்.
- எளிய பாடல்களைப் பாடி மகிழ்தல்.
- அறக்கருத்துகள் உணர்த்தும் பாடல்களைப் படித்துப் பொருளுணர்தல்.
- இலக்கணக் கருத்துகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (இருதிணை, ஐம்பால், இருவகை எண் (ஒருமை, பன்மை, பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடை)
- எளிய நடைமுறை இலக்கணக் கூறுகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள்)
- இரு சொல் தொடர்களைப் படித்தல்.
- விளம்பரம்/ அறிவிப்பு முதலானவற்றைப் படித்துக் கருத்துணர்தல்.

### எழுதுதல்

- புதிய சொற்களுக்குப் பொருள் அறிந்து எழுதுதல்.
- உரைப்பகுதிகளைப் படித்துப் புரிந்துகொண்டு விடை எழுதுதல்.
- இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதிப் பழகுதல். (இருதிணை, ஐம்பால், ஒருமை, பன்மை, பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடை)
- எளிய மொழிப்பயிற்சிகளைப் புரிந்துகொண்டு விடையளித்தல். (ஒலி வேறுபாடுடைய சொற்கள், வினாச்சொற்கள் போன்றவை)
- விடுகதை/ புதிர் போன்றவற்றைப் படித்து விடை எழுதுதல்,
- உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.
- ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுதல்.
- படத்தொகுப்புகள், நாட்குறிப்புகள், கையெழுத்து இதழ்கள் உருவாக்குதல்.
- எளிய செயல்திட்டங்களை மேற்கொள்ளுதல்.

## மேலாய்வாளர் குழு

**முனைவர் ச. மாடசாமி,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மருதூர் அரங்கராசன்**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**திரு. ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி,

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி &
இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி – 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி
நிறுவனம், திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**திரு. நி. சிவக்குமார்,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி
நிறுவனம், குமுளூர் லால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி
மாவட்டம்.

**முனைவர் க. ஜானகி,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. ச. சுசீந்திரன்,**
உதவி நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**முனைவர் இரா. சிங்காரவேலன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு. ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி,
ஜமீன் இராயப்பபேட்டடை , செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பாளர்

**திரு. ச. அசோக் குமார்,**
68, வடக்கு தெரு, எக்கியர்குப்பம், மரக்காணம் 604 303

**திரு. வே.வெண்மணிவேலன்,**
நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## ஓவியங்கள்

**திரு. கா. தனஸ் தீபக் ராஜன்,**
ஓவியர், நலன் தனஸ் ஸ்டுடியோஸ், சேலம்.

**திரு. அச்சுதன் ரவி,**
ஓவிய ஆசிரியர், நாடார் கமிட்டி மேல்நிலைப்பள்ளி, தென்காசி.

## பாட ஆசிரியர் குழு

**திருமதி மு.கீதா,**
இடைநிலை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
சந்தைப்பேட்டை, புதுக்கோட்டை மாவட்டம்

**புலவர் க. சிவகுமார்,**
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி,
ஏலாக்குறிச்சி, அரியலூர் மாவட்டம்

**திரு. கோ. சிவகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, பள்ளப்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.

**திரு. ஏ. சக்திகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,
விக்ரவாண்டி, விழுப்புரம் மாவட்டம்.

**திரு. வே. நஞ்சகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,
தூசூவாடி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

**திரு. இரா. பிரபாகரன்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,
பொட்டிரெட்டிபட்டி, நாமக்கல் மாவட்டம்.

**முனைவர் சு. பலராமன்,**
முதுகலைத் தமிழாசிரியர், ஜெயின் பப்ளிக் பள்ளி,
திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம்,
சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம்,
சென்னை-25.

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-6-7